Vo . II.] April, 1910 [No. 10




## CONTENTS


Non-attachment ... 297

Karmakanda—Its object ... 298

Rao Saheb, Viswanath Narayan Mandlick, C.S.I. (*a life-sketch*) ... 302

Sri Adi Sankaracharya: by M. R. Ry. V. S. Maniam ... 305

Studies in Animal Life—I. Bats: by M. R. Ry. V. Narasimha Aiyangar Avergal, M.A., B.L. ... 306

Friendship by Pundit S. M. Natesa Sastri ... 308

Arupathumoovar at Mylapore ... 310

The Mad Tailor: by M. R. Ry. G. Sundaresa Aiyar Avergal, B.A., L.T. ... 316

Kumara Sambhavam: by Pundit Natesa Sastri ... 319

Children's pages ... ... ... ... ... 324

Ladies' pages ... ... ... ... ... ... 326

General News ... ... ... ... ... ... 328


*All rights reserved.*



# சில சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

## இராமாயண வினவிடை — மூன்றாம் பதிப்பு

இதில் இராமாயணக் கதையின் ஏழுகாண்ட ஸாரமும், ஸந்தேஹமுண்டாகக்கூடிய நிலைமைகளுள்ளவிடத்து ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தீர்ந்த விசாரமும், நீதிகள் போதிக்கக்கூடிய விடத்துப்படிப்பினைகளும் காட்டி இயற்றப்பட்ட ஓர் இனிய நூல். சிறுவர் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதன்றி, பெரியோரது மனத்தையும் களிப்பிக்குமாறு; அத்யாத்ம ராமாயணத்திலும், ஆநந்த ராமாயணத்திலும் கண்ட, இராமாயணத்தின் உட்பொருளும் அநுபந்தமாக இப்புத்தகத்திற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பனெழுதிய கதைக்கும் வடமொழியில் வால்மீகி எழுதிய கதைக்குமுள்ள வேறுபாடுகள் மற்றோர் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் பல பாடசாலைகளில் பாடபுத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாவராலும் நன்கு மதிக்கப்படுகிறது. சின்னாட்குள்ளாகவே மூன்றாவது பதிப்பு வெளிவந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமையைவிளக்கும். நமது புத்தகத்திற்கென்றே இதுவரையும் கண்டிராத புதிய சித்ர படங்களுடன் ஒவ்வொரு காண்டமும் விளக்கப்பட்டிருக்கிறது. இது ம-ா-ா-ஸ்ரீ, அ. சி. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி., அவர்களால் இயற்றப்பட்டது.

புதிய பதிப்பு, படங்களுடன் ரூபா **1-0-0.** — விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **12.**

## ஸ்ரீமத் பாகவத வினவிடை — முதல் பாகம்

முதலொன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது. கபிலவாஸுதேவர், த்ருவர், ப்ராசீன பர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபரதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், ஸ்ருஷ்டி விஷயம், வருணாசிரம தருமங்கள் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திரமோக்ஷம் முதலிய உபாக்யானங்களும் அமைந்திருப்பதன்றி மஹாப்பிரளயம் சாஸ்திரசிருஷ்டிக்கிரமம், சாஸ்த்ரபுராண ச்ருஷ்டிகளின் பொருத்தம், த்ரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவைகள் இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை அடங்கி 10-உயர்ந்த சித்திரப்படங்கள் ஸ்கந்தத்திற்கேற்றவண்ணமடங்கியது. விலை ரூ. 1 — விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **12**

## ப்ரபாவதி

இது வங்காளிபாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாதசட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும், முயற்சித்திருவினையாக்கும் என்னும் படிப்பினையையும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால்வரும் ஸுகம் இது முதலியவைகளைப்பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்கமுடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. ஸ்ரீ சைலதாதாசாரியாரால் இயற்றப்பட்டது. விலை அணா **4.**

## மஹாபாரத வினவிடை — முதல் பாகம்

இரண்டாம் பதிப்பு — ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக, பர்வங்களடங்கியது.

வேதவியாஸர் எழுதிய இதிகாசத்தின் முதலைந்து பருவங்களின் விஷயங்களை வினவிடை ரூபமாக அமைக்கப்பட்டது. யக்ஷப்பிரசனம் முதலிய உயர்ந்த விஷயங்களடங்கியது. கதை ஸரளமாக யாவராலும் அறியும்வண்ணம் எழுதப்பட்டுள்ளது. கௌரவ பாண்டவர் யுத்தஸந்நதமாகும் வரையுள்ளகதை முழுதும் இதனுள் எழுதப்பட்டு பலபாடசாலைகளில் பாட புத்தகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பொய்யாஸனமிட்டபடம் இதற்குத் தலைப்பில் சேர்க்கப்பட்டதன்றி தமிழ்ப்பாரதத்திற்கும் வியாஸபாரதத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அநுபந்தமாகக்கூட்டப்பட்டிருக்கிறது. அணா **12**

விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **8**

இரண்டாம் பாகம் — பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, ஸௌப்திக, ஸ்திரீபர்வங்களடங்கியது

இதில் யுத்தத்திற்காரம்பமானது முதல் யுத்தமுடிவுவரையுள்ளகதை அடங்கியுள்ளது. முதலில் ஸ்ரீ வாஸுதேவன் அர்ச்சுனனுக்கு உபதேசித்த கீதாஸாஸ்திரம் விளக்கமாக ஸந்தேஹமற எழுதப்பட்டிருக்கிறது. இந்தபாகத்துக் கதைகளுள் தமிழ்பாரதத்திற்கும் வடமொழி கிரந்தத்திற்குமுள்ள வேறுபாடுகள் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. விலை அணா **12**

விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **8**

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.

277



ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள்



ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்

பிரசுரம் செய்பவர்கள்:—ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.

# விவேக போதினி

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "——திருவள்ளுவர்

தொகுதி II } ஸாதாரணஹு சித்திரைமீ 1910–ஹு ஏப்ரல்மீ { பகுதி 10


## வைராக்கியம்

### NON-ATTACHMENT

ஆத்மாநித்யம் என்ற மாறா உணர்ச்சி உண்டாவதற்கு ஸன்மார்க்கத்தில் பழகுவதே முக்கியஸாதனம். இது (1) வைராக்கியம் (2) உபரதி (3) ஞானம் என்ற மூன்றனுள் அடங்கும்.

இவைகளுள் வைராக்கியத்திற்குக் காரணம் விஷயத்தில் தோஷதிருஷ்டி வருவதே. உலகில் உள்ள விஷயங்கள் எவ்வளவு தான் ஸுகம் கொடுப்பனவாயினும், நிலையற்றவை, முன் ஆசை என்ற துக்கத்தையும், பின் கிட்டிப்போதல் என்ற துக்கத்தையும், அனுபவிக்குங்கால் இவை போய்விடுமே என்ற துக்கத்தையும் உடையவை; மனதை மேன்மேலும் சஞ்சலப்படுத்தும்குணமுடையவை, ஆத்மலாபம்என்பது ஒன்று உண்டு என்ற உணர்ச்சியை எழவொட்டாது தடுப்பவை, அவைகள் ஒருவனை மீளாத்துயரத்திற்கு ஆளாக்கிவிடும், ஆதலால் அவைகளை ஒருபோதும் விரும்பலாகாது என்ற உணர்ச்சிக்கே விஷயதோஷ திருஷ்டி என்று பெயர். இது உலகஸுகங்களில் தோன்றினுல் மாத்திரம் தான் தீவிர வைராக்கியம் பிறக்கும். உலகதுக்கங்களில் கோபவேளையில் இது உண்டானுல் ஆபாஸ வைராக்கியத்திற்குக்காரணமாகி ஒருவனைத் திரிசங்கு ஸ்வர்க்கத்தில் நிறுத்திவிடும்.

இவ்வாறு நேர்மையான விஷய தோஷ திருஷ்டியால் உண்டாகும் வைராக்கியத்திற்கு ஸ்வரூபம் யாது எனில் விஷயங்களைக்கண்டால் அருவருப்பு உண்டாவது. நாய் வாந்திசெய்த சோற்றைக் கண்டால் நமக்கு எவ்வளவு அஸங்கியம் உண்டாகிறதோ, அவ்வாறே விஷயஸுகங்களைக் கண்ட மாத்திரத்தில் தன்னை அறியாமலே அவைகள் முற்கூறிய தீங்குகளை உடையன என்ற எண்ணங்கள் கிளம்பி மனது கஷ்டப்பட, ஸுகங்களில் அருவருப்பு உண்டாவதே நிஜ வைராக்கியத்தின் ஸ்வரூபம்.

நிஜ வைராக்கியம் உண்டாவதால் ஏற்படும் காரியம் என்ன? அதாவது, முடிவுஎன்ன? என்ற சங்கை பிறக்கும். நிஜவைராக்கியம் ஒருவனுக்கு வருமாயின் அவனுக்கு வர வர விஷயங்களில் வெறுப்பால் ஆசை குறைந்து முடிவில் விஷயத்தைக் கண்டபோதிலும் அதனிடம் ஆசை உண்டாகாதநிலைவரும். அதாவது அப்பியாஸ நிலையில் விஷயங்களைக் கண்டு வெறுப்புடன் பயந்து ஓடியதுபோல ஓடாமலும், அவைகளைக்கண்டவிடத்து ஆசைவராமலும் இருக்கும் உபேக்ஷா நிலையே இந்த வைராக்கியத்தின் காரியம்.

இந்த வைராக்கியம் எந்த எல்லைவரையில் பழக வேண்டியது. உலக விஷயங்கள், உலகில் உள்ளபதவிகள் இவைகள் விஷயத்தில் மாத்திரம் தான் பழக வேண்டியது. என்று சாஸ்திரங்கள் கூறும். மேலான பதவியாகிய பிரம்மலோக பதவிவரையில் உள்ள எல்லாப்பதவிகளையும் துரும்புபோல மதிக்கவேண்டியது; பிரம்மலோகத்தில், வைராகி பிரம்மாவால் உபதேசம் பண்ணப்பெற்று முக்தி அடைகிறுன் என்பது சாஸ்திரங்களிலிருந்து வெளியாகும். ஆகவே ஆசார்ய சிஷ்யபதவி தவிர மற்றைய உலக ஸம்பத்துக்கள் எல்லாவற்றிலும் வைராக்கியம் செலுத்த வேண்டியது. இதுதான் வைராக்கியத்திற்கு எல்லை.

இனி வைராக்கியத்தால் வரும் பயன் யாது? பிரம்மலோகப் பிராப்தி என்று கூறப்பட்டிருக்கிறது அதாவது ஸத்குருலாபம் என்பதே. ஒருவன் நிஜ வைராகியாகிப் பக்குவமாகுங்கால், நல்ல சிஷ்யன் ஸத்குருவைத் தேடுவது போல, நல்ல சிஷ்யனைத் தேடிவரும் ஸத்குரு அவனுக்கு வந்து சேருவார். இந்த ஸத்குரு லாபமே நிஜவைராக்கியத்தின் பலன்.

இதுபற்றியே பஞ்சதசப் பிரகரணத்தில் ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகள் 'வைராக்கியத்திற்கு ஹேது, விஷய தோஷ திருஷ்டி, அதன் ஸ்வரூபம், ஒக்காளம், காரியம் விஷய ஆசை திரும்பவும் வாராமலிருத்தல், எல்லைபிரம்மலோக பரியந்தம் துரும்பாக எண்ணுதல், பலன் பிரம்மலோகப் பிராப்தி' என்று கூறி இருக்கிருர்,

விவேக போதினி

தொகுதி 2] ஸாதாரணஹு சித்திரைமீ [பகுதி 10

## கர்மகாண்டம் : அதன் நோக்கம்

### KARMAKANDA : ITS OBJECT

முன் இரண்டு வியாஸங்களில் கூறியவைகளிலிருந்து கர்மகாண்டத்தில் கூறப்படும் யாகாதிகளை நாம் செய்யாதுவிட்டாலும் குற்றமில்லை அல்லது உயிருடைய பசுவுக்குப் பதிலாக மாவாற் செய்த பசுவை உபயோகப்படுத்தி யாகங்களைச் செய்தாலும் யாகம் செய்த்தாகும் என்றும், கர்மகாண்டத்தில் கூறப்படும் விஷயங்கள் தாழ்ந்தவைகள் அல்ல: கதைகள் வேடிக்கைக் கதைகள் அல்ல என்றும், இவைகள் எல்லாவற்றிற்கும் சிறந்த உட்கருத்தும் நோக்கமும் இருப்பதால் இவைகள் மிகச் சிறப்புவாய்ந்தவை என்றும், வாசிப்போர் தெரிந்து கொள்ளலாம். கர்மகாண்டத்தின் உட்கருத்தையும், அது இவ்வாறு மனிதனைப் பக்குவியாக்க மெதுவாக மேலான ஞான பாகத்தில் வந்து சேரும்படி செய்கிறது என்பதையும் இக்குக் கர்மகாண்ட மந்திரங்களிலிருந்து வற்புறுத்தி, நன்கு விளக்குவோம்.

கர்மகாண்டத்தில் அங்கும் இங்கும் பரம்பொருள் ஸ்தோத்திரங்கள்காணப்படுகின்றன. பொதுவாகக் கர்மங்களையும் அவை சென்றடையும் தேவதைகளையும், அவர்களை ஸ்தோத்திரம் செய்யும் வகைகளையும் கூறிக்கொண்டு வரும் கர்மகாண்டத்தில் தேவதைகளை வியாஜமாகக்கொண்டு அவைகள் மூலமாகப் பரம்பொருளையே நேரிடத் துதிக்கும் மந்திரங்கள் அடிக்கடிக் காணப்படுகின்றன. இதனால் கர்மகாண்டத்தில் ஸம்பந்தப்பட்டவைகள் முழுவதும் கர்மவிஷயங்கள் அல்ல, அவைகளில் சிற்சிலகர்மத்தைவிட மேலான நிலைகளைக் குறிப்பிக்கின்றன, என்பது விளங்கும். இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு சிலமஹான்கள் வேதமுழுவதுமே பரம்பொருளைப்பற்றி ஏற்பட்டது, கர்மங்களைப்பற்றிக் கூறும் பாகங்களைக்கூட உட்கருத்து மூலமாகப் பரம்பொருளைப்பற்றிக் கூறுவதாகக் கொள்ளலாம், என்று அபிப்பிராயப்படுகின்றனர். இதை அநேகப்பெரியோர்களும் அங்கீகரிக்கின்றனர். இதன்பிரகாரம் வேதம்முழுவதும் ஸகலலோகத்திற்கும் ஆதாரமான பரம்பொருளையே நேரிடத் துதிக்கும் மந்திரங்களை உடையதாகும். ஆனால் ஸாதாரண ஜனங்கள் எளிதில் உணரக்கூடாவண்ணம் பரம்பொருளைப்பற்றி வேதம் கூறுவானேன், என்ற சங்கை பிறக்கும். ஸாதாரண ஜனங்கள் மனம் கர்மங்களில் பற்றியிருப்பதால், அவர்களையும் விருத்தியடையும்படி செய்ய வேதம் பொதுவாகக் கர்மகாண்டத்தில் ஞான விஷய உட்கருத்துகள் அமைந்த கர்மவிஷயமந்திரங்களை கூறி சிறப்பாகச் சிற்சில விடங்களில் பரம்பொருளை (தேவதைகளை முன்னிட்டுக் கொண்டு) நேரிடத் துதித்திருக்கின்றது. மேலும் பிராம்மணங்களில் ஞானஉட்கருத்துக்கள் கொஞ்சம் வெளிப்படையாகின்றன. இதனால் ஸாதாரண ஜனங்கள் கர்மபாகத்தை எளிதில் பின்பற்ற, சிறப்பாகிய பரம்பொருள் துதி பாகங்களால் அவர்களுக்கு ஆஸ்திக புத்தி உண்டாக்கிக் காலக் கிரமத்தில் அவர்களை ஞானகாண்ட அதிகாரிகளாக்கவேண்டும் என்பதே வேதத்தின் கருத்து. இப்பொழுது கர்மகாண்டத்தில் நேரிடப் பரம்பொருளைத் துதிக்கும் சில மந்திரங்களையும் இருபொருள் மந்திரங்களையும் உதாரணங்களாக எடுத்துக்காட்டுவோம்.

பரம்பொருளை நேரிடத்துதிக்கும் மந்திரங்கள் பின்வருவன.

1. ருக்வேதம் 1-5-17.—'விஷ்ணு (எங்கனும் வியாபி), பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய

இவைகளை மூன்றடியால் அளந்து எங்கணும் வியாபித்தார்.

2. ருக்வேதம் 1-5-18.—ஜயிக்க முடியாதவரும், பிரபஞ்ச ரக்ஷகருமாகிய விஷ்ணுவானவர் பரிசுத்தமான கர்மங்களைக்காக்க (முற்கூறியபடி) மூன்று அடியால் அளந்தார். விஷ்ணுவின் செயல்கள் எவ்வளவு அத்புதமாயிருக்கின்றன! ஓ! ரிஷிகளே! அவரைத் தியானம் செய்து துதியுங்கள். அவருடைய ஸஹாயத்தால் யஜமானன் தனது கர்மங்களை ஸரிவர முடிக்க முடியும். இந்திரனுக்கும் அவர்தான் ரக்ஷகராகிய பிராண ஸ்நேஹிதர்.'

3. ருக்வேதம் 1-5-19:—'ஸாதாரண ஜனங்கள் ஆகாயப்பரப்பைத் தமது கண்களால் தெளிவாகப் பார்ப்பதுபோல சாஸ்திரங்களின் ஸஹாயத்தால் (ஞானக்கண் உண்டாகப்பெற்ற) ரிஷிகள் விஷ்ணுவின் பரமபதத்தைத் தெளிவாக உணருகிறார்கள்.

4. ருக்வேதம் 1-5-20:—விஷ்ணுவின் சிறப்பை வித்வான்கள் (பிரம்மவித்துக்கள்) தமது தெளிவான ஞானம், ஸ்தோத்திரம் முதலியவைகளால் பிரஸித்தப்படுத்தப்படுகின்றனர்.

பின்வரும் இரண்டு மந்திரங்கள் இருபொருள் உடையவைகள். அவைகளுள் ஒன்று பரம்பொருளைக் குறித்துள்ளது. ஸாதாரணமாக நோக்கில் இவைகள் ஸூர்யனைக் குறித்துள்ளன என்று தோன்றும்.

1. 'ஓ ஸூர்யா! நீ அளவிடமுடியாத தூரம் ஓடித்திரிகின்றாய். உன்னைச்சற்றுக் கண்ணெடுத்துப்பார்த்த உடனே பார்ப்பவன் புனிதனாவான். சந்திரன்போன்ற கோளங்கள் உன்னிடமிருந்து பிரகாசம் பெறுகின்றன. இதுமாத்திரமன்றிப் பிரபஞ்சம்முழுவதும் உன்னாலேயே பிரகாசிக்கின்றது.'

2. தபஸு செய்யும் நாங்கள் இருளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகியும் ஒப்பு உயர்வில்லாதவனாகியும், தேவாதி தேவனாகியும் உள்ள ஸூர்யன் ஆகாயத்தில் கிளம்புவதைக் காண்கிறோம்.

இவ்விரு மந்திரங்களுக ஸூர்யனைப்பற்றியவைகள் போலக் காணப்படுகின்றன. கர்மகாண்டமாதலால் முதல் மந்திரம் முதல் பாகத்தில் ஸூர்யனைப்பற்றி நேராகக்கூறி, வேதமானது மெதுவாகவும் வெகு அழகாகவும் முதல் மந்திர இறுதியில் தன் உட்கருத்தைத் 'இதுமாத்திரமன்றிப் பிரபஞ்சம் முழுவதும் உன்னாலேயே பிரகாசிக்கின்றது?' என்ற பாகத்தால் சற்று வெளியாக்கி, அடுத்த மந்திரத்தில் தனது உட்கருத்தை முழுவதும் வெளிப்படுத்துகிறது. 'சந்திரன்போன்ற கோளங்கள் உன்னால் பிரகாசிக்கின்றன' என்றவரையில் ஸூர்யனைப் பற்றி நேர வேதம் கூறுகிறது என்பதை ஒருவராலும் தடுத்துக் கூறமுடியாது. அதே மாதிரி, முதல் மந்திரத்தின் கடைசி வாக்கியத்தையும் இரண்டாவது மந்திரத்தையும் உற்று நோக்குங்கால் ஸூர்யனைப்பற்றியவை என்று மதிக்கவே முடியாது. பொதுவாய் மேலெழுந்தவாரியாக நோக்குபவர் ஸூர்யோபாஸகன் ஒருவன் தன் தெய்வத்தைப் பற்றி இவ்வாறுதான் கூறுவன் ஆதலால் இப்பாகங்களும் ஸூர்யனைப்பற்றியே கூறுகின்றன, என்று கூறிவிடலாம். ஆனால் ஸூர்யன் பிரபஞ்சம் முழுவதும் பிரகாசிக்கிறான் என்பது முழுத்தவறல்லவா? ஸூர்யனைப்போல எத்தனையோ பிரகாச கோளங்கள் இருக்கின்றன என்பது நமது ரிஷிகளுக்குத் தெரியாதா? ஸூர்யன் இந்தத்துதிக்கு அருகன் அல்ல. மேலும், 'தபஸு செய்பவர்களுக்குத்தான் அது ஆகாயத்தில் கிளம்புவது தெரியுமோ? மற்றவர்களுக்குத் தெரியாதோ' என்ற சங்கை உண்டாக, 'ரிஷிகள் ஸாதாரண ஜனங்களுக்கு எந்தச் சிறந்த உண்மையை எடுத்துக்கூற இவ்வாறு ஸூர்யனை வியாஜமாக வைத்துக்கொண்டு முயலுகின்றனரோ? நேரிடக் கூறினால் ஸாதாரண ஜனங்கள் மனதில் நன்றாகப் பதியாதென்றே எண்ணி இவ்வாறு முயன்றார்கள் போலும்' என்ற எண்ணங்கள் நமக்குண்டாகும். இது பரம்பொருளைப்பற்றிக் கூறுகின்றது என்று ஏன் ஆஸ்திகர்கள் மனதில் உடனே தோற்றாது? இத்தோற்றம் உண்டானதும், முதல் மந்திர

த்தின் முற்பாகத்தில்கூட ஸூர்யனைப்பற்றி நேரே கூறவில்லை யென்பதும், அங்கு ஸூர்யனைப் பரம்பொருளது குறி அல்லது விக்கிரஹமாகக் * கொண்டுதான் கூறப்பட்டிருக்கிறதென்பதும் விளங்கும். இப்பொழுது அவ்விரு மந்திரங்களும் பின்வருமாறு பொருள்படும்:—

1. ஓ பரம்பொருளே! நீர் எங்கும் ஓடிப்பரவியவர், உம்மைச் சற்றுத்தியானித்தால் மோக்ஷம் அடைந்து பரிசுத்தமாவோம். நீரே ஸகலத்திற்கும் ஆதாரம். உம்மால்தான் உலகமே பிரகாசிக்கின்றது. உம்மால்தான் மனித தேவாதி பிரபஞ்சத்திற்கு அறிவு உண்டாகிறது.

2. தமோமஹிமையால் அஞ்ஞானம் நீங்க அதற்கப்பாற்பட்ட பரம்பொருளாகிய உம்மைக் காணுகிறோம். நீர் ஒப்புயர்வற்றவர், தேவாதி தேவன், நமது சிதாகாசத்தில் இப்பொழுது பிரகாசிப்பதை நாங்கள் உணருகிறோம்.

இதுபோலவேதான் ருக்வேதத்தில் அக்னியைப்பற்றிக் கூறும் மந்திரமும்.

1. (1-வது மந்திரம்). யாகத்தில் முதன்மையாயும், யாகத்திற்குத் தேவதையாயும், தேவதைகள் புரோஹிதராயும், யஜமானனுக்கு ஸகல ஸம்பத்துக்களைக் கொடுப்பவராயும் உள்ள அக்னியை நான் துதிக்கிறேன்.

2. ஓ அக்னி! ஸகல சிறப்பையும் கொடு. எங்கள் துக்கத்தையும் போக்கி, பரமஸுகத்தைக்கொடுத்து, எங்களுடன், தகப்பன் பிள்ளையிடத்திருப்பதுபோல ஸதா பற்றுள்ளவனாக இரு.

இவைகள் அக்னியைத் துதிப்பவைபோலக் காணப்படுகின்றன. அக்னி என்னும் பதத்திற்குச் சிறந்த அதிபதி என்று பொருள். இந்தப்பொருளில் இப்பதம் ஆதிகாரணமாகிய பரம்பொருளையே உணர்த்தும். மேலும் இந்த மந்திரங்களில் கூறியுள்ள விஷயத்தை நேரிட ஸாதாரணநெருப்பைப்பார்த்துக்கூறுவதுபொருந்தாது என்பதும், இவை அக்னியை விக்கிரஹமாக உடைய பரம்பொருளையே நோக்கிக் கூறியவை என்பதும் விளங்கும். ஆகவே இவைகளின் உட்பொருள் பின்வருவன.

* வேதத்தில் விக்கிரஹ ஆராதனமே இல்லை என்று கூறும் அவஸரக்காரர் வார்த்தை நம்பவேண்டாம்.

1. சிறந்ததாயும், எல்லாவற்றையும் விடப் பெரிதாயும், யாகத்தில் ஆராதிக்கப்படும் பொருளாயும், யஜமானனுக்கு ஒப்புயர்வற்ற பதத்தைக் கொடுப்பதாயும் உள்ள பரம்பொருளை நான் துதிக்கிறேன்.

2. ஓ பரம்பொருளே!........................................

இம்மாதிரியே இந்திரன், வருணன், வாயு, ஸவிதா முதலிய பதங்களுக்கும் தாதுக்கள் மூலமாக நோக்கில் பரம்பொருள் என்ற ஒரு அர்த்தம் உண்டு. இந்த விஷயத்தை வியாஸர் தாம் எழுதிய வேதச்சுருக்கமாகிய பிரஹ்ம ஸூத்திரத்தில் விஸ்தாரமாக எடுத்துக் கூறியிருக்கிறார். ஆகையால் ஸகல தேவதைகளையும்பற்றிக்கூறும் மந்திரங்கள் ஆழ்ந்துநோக்கில் பரம்பொருளைப்பற்றிக் கூறுவன என்பது விளங்கும்.

இந்தச் சிறந்த பொருளை நேரிற்கூறாமல் எடுத்துக்கூறி, சற்று நிதானிப்பவர் மனதில் நன்றாகப் படும்படியாகவும், ஸாதாரண ஜனங்கள் கண்டு பிரமித்து நிதானிக்கும்படியாகவும் வேதம் எவ்வளவு அழகாய் கர்மகாண்டத்தில் நுழையவிட்டுக் கர்மகாண்டத்தின் நோக்கத்தைக்காட்டியிருக்கிறது பாருங்கள்! இதுபோலவே கர்மகாண்டத்தில் அநேக இடங்களில் காணலாம். எவ்வளவு தான் ஜனங்களுக்கு வேதம் அபக்குவ காலங்களில் பரம ரஹஸியத்தை மறைத்துக் கூறப் புகுந்த இடத்தும், தனது கருணை மிகுதியால் ஆங்காங்கே தன் நோக்கத்தின் கோடியைக் காட்டாமல் போகவில்லை! இம்மாதிரிக் காட்டுவதைக் கூடக் கவனியாமல் தான், மேனாட்டவர்கள் கர்ம காண்டத்தைப்பற்றி வாயில் வந்தபடி எல்லாம் பிதற்றுகின்றனர். இம்மாதிரிவேதங்களில் காட்டியிராவிடில் நாமும், 'ஓர் நாசகாலியின் பாட்டைக்கேட்டுச்சிலர் பன்றியாக மாறியதுபோல' மேனாட்டவர்களது வாக்சாதுரியம் யுக்திவாதம் முதலியவைகளில் ஈடுபட்டு வேதத்தை நிந்திக்கும் கழுதைகளாயிருப்போம்.

மேனாட்டவர்கள் கர்மகாண்டத்தின் நோக்

கத்தை அறியும் திறமில்லாது வெகு சாதுரியமாகப் பின்வருவாறு கூறுவதுண்டு. 'கர்மகாண்டம் முதலிலும், ஞானகாண்டம் பின்னரும் எழுதப்பட்டது. கர்மகாண்ட கர்த்தர்களுக்குப் பரதெய்வம் உண்டென்பது தெரியாது. ஆதலால் அவர்கள் கர்மம், அற்புத அல்லது பயங்கரமான தோற்றங்கள், உபயோககரமான வஸ்துக்கள், இறந்தவர்களின் உயிர்கள் இவைகளைத் தெய்வமெனக் கொண்டாடினர். பின்னர் வரவரப் பிரபஞ்சப் பழக்கம் முதிர்ந்து தமது அறியாமை நீங்கியதும், பெரியோர்கள் உண்மையானதெய்வம்ஒன்றுண்டுஎன்றுஉணர்ந்துஞானகாண்டத்தைஎழுதலாயினர். இதற்கு ஆதாரம் கர்மகாண்டத்திலிருக்கும் ஸம்ஸ்கிருதத்திற்கும், ஞானகாண்ட ஸம்ஸ்கிருதத்திற்கும் உள்ள பேதமே' என்று கூறி முடிக்கின்றனர். * இவர்களது வாக்கியங்கள் எவ்வளவு ஒழுங்காக இருக்கின்றன! கண்டு மலைக்கவே வேண்டாம்! முன் எடுத்துக்காட்டிய கர்மகாண்ட நோக்கத்தை ஐயம் திரிபற உணர்த்தும் மந்திரங்களும், அவைபோன்ற மற்றைய மந்திரங்களுமே, மேனாட்டார் கர்மகாண்ட கர்த்தர்களுக்கு உண்மையான பரம்பொருள் ஒன்றுஉண்டு என்பது தெரியாது என்று கூறுவது, வெறும் கலஹஹேதுவான பொய்என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது. மேலும் ஸம்ஸ்கிருத பேதத்தால் மாத்திரம் ஞானகாண்டம் உண்டான காலம் கர்மகாண்டம் உண்டான காலத்திற்குப் பின்னாக இருத்தல்வேண்டும் என்று ஸ்தாபிக்கவே முடியாது. விஷயங்கள் மேன்மையானவைகளாகுங்கால் அவைகளைக்கூறும் பாஷை நடை எளிதாயும், மிக ஆற்றலுடையதாயும்மாறும். கர்மகாண்டம் பிராம்மணர்களுக்கு மாத்திரம் ஏற்பட்டதாயும், ஞானகாண்டம் பொதுவாக ஏற்பட்டதாயும் இருப்பதால் கர்மகாண்ட நடை மிகக் கடினமாயும் மரபுச்சொற்கள் அதிக உடைத்தாயும், ஞானகாண்டம் எளிய நடையில் அமைக்கப்பட்டதாயும் இருக்கலாம். இவைகளைக் கவனியாமல் ஆரியர்களுக்கும் தமது மூதாதைகளைப் போல ஒன்றும் தெரியாதுஎன்று ஸ்தாபிக்கவேண்டும்என்ற அகங்காரத்துடன், தமது மதபுஸ்தகத்திலிருக்கும் புதிய பழய ஏற்பாடுகளைப்போன்றவை இக்காண்டங்கள் என்று கூறித் திருப்தி அடைய வேண்டும் என்று முயலும் வெளிநாட்டார் சொல்லைக்கேட்டு ஏமாறவேண்டாம். அவர்கள் கூறுவதுபோல முன்பின்னாக இவ்விரு காண்டங்களும் வந்தபோதிலும், இப்பொழுது உலகத்தில் அகங்காரம் கொண்டு உலாவும் மதங்களை ஏற்படுத்தியவர்கள் பிறப்பதற்கு அநேக காலங்களுக்கு முன்னர் இது நடந்தேறியிருக்கவேண்டும். அப்படிக்கூறினும் ஸநாதன தர்மத்திற்கு யாதொரு குறைவும் இல்லை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இந்த நோக்கத்துடன் வெளிவந்த கர்மகாண்டம் எவ்வாறு மனிதனைப் பக்குவப்படுத்துகிறது என்பதைச்சற்று விசாரிப்போம். கர்மகாண்டம் முதலில்தான்குறிப்பிடுங்கர்மங்களால்இவ்வுலக விஷயங்களிலிருந்து மனிதனது மனதை எளிதில் நீக்கி, இவ்வுலகத்திற்கப்பாற்பட்டதாகிய விஷயங்களில் பற்றும்படி செய்கிறது. இவ்வாறு பழகிவரும் ஒருவனுக்குக் கர்மகாண்டத்தில்ஆங்காங்குமறைவாயும் நேராயும் கூறப்படுவதாயும், யாகங்களில் ஆராதிக்கப்படுவதாயும் உள்ள பரம்பொருளைப் பற்றிய துதிகள் அவன் மனதில் பதிந்துகொண்டேவரும். மேலும் யாகம் செய்வதில் உண்டாகும் கஷ்டம் முதலியவைகளால் கர்மத்தில் பொதுவாக ஒரு வெறுப்பும் உண்டாகும். யாகத்தின் முடிவாகிய ஸ்வர்க்கலோக வாஸம் நிலையற்றதாயும், சீக்கிரம் முடிந்துவிடுமே என்ற பயத்தோடு ஸம்பந்தப்பட்டதாயும் இருப்பதால் யாகவிஷயங்களில் இவனுக்கு வரவர வெறுப்பு அதிகரித்துக்கொண்டேவரும். இதனால் கர்மகாண்டத்தில் கூறும் பரம்பொருள் எந்த ஸ்வரூபம் உடையது? ஆராதிக்கும் என் ஸ்வ

* இந்த விஷயத்தின் விஸ்தாரத்தை விவேகபோதினி முதல் தொகுதி 7-ம் பகுதியிலிருக்கும் முதல் வியாஸத்தைப் பார்க்க.

ரூபம் என்ன? எனக்கும் அந்தப் பரம்பொருளுக்கும் யாது ஸம்பந்தம்? யாகப்பலனைவிட எக்காலத்திலும் நிலைத்து நிற்கக்கூடிய பயன் ஒன்றும் இல்லையா? உலக விஷயங்களைப் பற்றி நிற்றல் கர்மம் செய்தல் முதலியவைகளால் உண்டாகும் மனச் சஞ்சலம் நீங்க உபாயமில்லையா? என்ற கேள்விகள் பிறந்து அவன் மனதைப் புண்படுத்தும். கர்ம காண்டத்தில் இவைகளுக்குத் தகுந்தபதில் அகப்படாததால் அவன் மனம் வரவர மிக வருத்தம் அடையும். உடனே வேதங்களை முற்றிலும் உணர்ந்த பெரியோர்களிடம் சேர்ந்து பழகி இவைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணி ஸாதுஸங்கம் செய்யத் தொடங்குவான். அவர்களுள் தன் மனதிற்குப் பிடித்த ஒருவரை ஆசார்யனாக்கிக் கொண்டு அவரிடம் ஸமித்தைக் * கையிலேந்திப்போய் நின்றுகொண்டு தான் படும் கஷ்டங்களை எடுத்துரைத்துத் தன்னைக் கஷ்டத்தினின்றும் விடுவித்து நல்ல வழிகாட்டிக் காக்கவேண்டுமென்று பிரார்த்திப்பான். அவர் அவனைச் சோதித்து மெதுவாக ஞானகாண்ட விஷயத்தைக் காலக்கிரமத்தில் புகட்டத் தொடங்குவார்.

இம்மாதிரி உலக விஷயங்களில் ஓர் வெறுப்பையும் அவைகளுக்கு அப்பாற்பட்ட ஞான காண்ட விஷயமாகிய பரம்பொருளை உள்ளபடி உணர்ந்து கஷ்டம் தீரவேண்டும் என்ற ஆவலையும் உண்டாக்குவதே கர்மகாண்டத்தின் நோக்கம். அதிற் கூறியவைகளை ஒழுங்குப்படி நம்மால் இயன்றமட்டும் இந்த ஞானத்துடன் நடத்திவந்தால் முடிவில் அவை நமக்குத் தீவிர மோக்ஷாபேக்ஷை உண்டாக்கி ஆசார்யனைத்தேடி அடையும்படி செய்யும்.

* ஸமித்தைக் கொண்டுபோவது ஆசார்யனது அக்னிஹோத்திரத்திற்கென்றும், ஆதலால் ஞானாசாரியன் கிருஹஸ்தனாயிருத்தல்வேண்டும் என்றும் சிலர் கூறுகின்றனர். இந்தக்கருத்து அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை. ஆசாரியன் எந்த ஆசிரமத்தனாக இருப்பினும் இருக்கலாம். ஸமித்தின் உட்கருத்து பின்வருவது. 'ஸமித்து எவ்வாறு நீர் வற்றி உலர்ந்திருக்கிறதோ அதுபோல என்மனமும் உலகப்பற்று அற்று உலர்ந்திருக்கிறது, மேல் என்ன இருப்பது என்பது விளங்கவில்லை. ஸமித்துத் தவருவதுபோலப் பரிதவிக்கிறேன்.' என்ற சிஷ்யனது உள் கஷ்டத்தை உலர்ந்த ஸமித்து குறிக்கிறது.

## விச்வநாத நாராயண மாண்டலிகர்

**RAO SAHEB, VISWANATH NARAYAN MANDLICK, C.S.I.**



அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்ப செய்து—பெறுவதனா
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

என்னும் நாலடி வெண்பாவிற் கூறியவாறு படிக்கவேண்டியதையெல்லாம் ஐயம் திரிபு அறக்கற்று. அவற்றிற் கூறியவாறு நின்று, தான் என்று கொண்ட கர்வமொழிந்து, கொடுமை முதலிய புன்மைச் செயல்கட்கு அஞ்சி, நன்மை செய்ய வருங்காலத்து வரும் துன்பங்களை அஞ்சாது மன வலிமைக் கொண்டு, உலகிற்குழைத்து, உலகத்தார் ஒப்ப நடந்து, கிடைத்ததைக்கொண்டு இன்பமடைந்துவாழுந் தன்மையை உடையவர் எவ்விடத்தும், எக்காலத்தும், எவ்விதத்திலும் கஷ்டப்

படுவர் என்று சொல்வது மிகவும் அரிது. மனவமைதியுற்றவர் சாந்தகுணமும் நிறைந்த படிப்பு முடையாராதலால் அவர் தாம் கஷ்டமடையாதிருத்த லன்றித் தம்மினத்தாரைக் கஷ்டப்படாம லிருக்கச் செய்வது அவரது ஸ்வபாவம்.

மஹாராஷ்ட்ர வம்சத்தலைவர்களாய் முன்பு பேஷ்வாக்களது ஸந்ததியாரோடு ஸம்பந்தங் கொண்டு நற்குலத்தில் உதித்த விச்வநாத நாராயண மாண்டலிகற்கு இக்குணங்களெல்லாம் பொலிந்திருந்தனவென்று நாம் ஏன் சொல்லவேண்டும். 1833ஆ மார்ச்மீ 3உ கோங்கண தேசத்து ரத்நகிரி தாலூக்காவில் முருதா என்னுங்கிராமத்தில் பிறந்த இவர், சிறு வயதில், பேஷ்வாக்களின் கீழ் ஸுபேதாராக இருந்த தோண்ட்பண்ட் என்னும் பேர் கொண்ட தன் பாட்டனாரிடை கல்வி கற்று வந்தனர். பின் பத்து வயதாயதும் ரத்நகிரியில் ஆங்கிலம் படிக்க அனுப்பப்பட்டங்கு ராவ்பஹதூர் ராமசந்திர பாலகிருஷ்ணர் என்னும் மஹானிடமிருந்தும் கல்வி பயின்று, பொம்பயில் எல்பின்ஸ்டன் கலாசாலையில் படித்தனர். அங்குப் பரிசு பலபெற்றுத் தனது குணவிசேஷங்களால், வித்வச்சிரோமணிகளாகிய ஹார்க்னஸ், பேட்டன், கீரீன் இவர்களுடைய ஆதரவையும் அடைந்து வாழ்ந்தார். இவர் சிறுபொழுது காட்டிய கல்வி விசேஷம், தனது ஆசிரியராகிய கணிதசாஸ்திர வித்வான் ஒழிவிலிருந்த காலத்து, இவரை அவர் வேலையை நடத்தும்படி ஏற்படுத்தியதே சான்றாகும்.

மாண்டலிகர் அக்காலத்தில் சிறந்த ஆங்கிலப்பரிக்ஷைகளில் ஒன்றில் தவிர மற்றெல்லா பாகங்களிலும் முதன்மையாய்த் தேறினர். அவர்க்கு அப்பொழுது வயது பத்தொன்பது. பேட்டன் இவரைச் சீமைக்குச்சென்று ஸிவில் ஸேர்விஸ் பரிக்ஷைக்குப் படிக்கும்படிச் சொன்னர். மாண்டலிகர் தன்னுறவினர்க்கு ஒப்பாதென்று விட்டுவிட்டார். பின் ஸிந்துநாட்டின் இராசாங்ககாரகரின் உதவி உத்யோகஸ்தாராக ஏற்படுத்தப்பட்டுக் கர்னல் ஜேகோபியின் கீழ் உத்யோகஞ் செய்து அவரால் பல பெரிய இடங்களில் பயின்று வந்தனர். மாண்டலிகர் பின் உபவித்யாபரீக்ஷகராகவும், பின் "ஸபார்டிநேட்ஜட்ஜா"கவும், அதன்பின் ராஜாங்கப்புத்தகசாலை பரீக்ஷகராகவும், வருமானவரி வசூலிக்கும் பிரிவினர் உதவியோராகவு மிருந்தனர். இவ்வளவு உயர்ந்த பதவியடைந்த மாண்டலிகர்க்கு, ராஜாங்க வேலையிலிருப்பின் உயர்ந்த தொகையாக வருமானம் வராதெனப்பட்டதிம் தன் வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டார். பின் நியவாத பரிக்ஷைக்குப்படித்து 1863ஆ நியாயவாதியாகப் பிரசுரிக்கபட்டனர். அப்பொழுது தான் பொம்பயி "ஸதார் அடலட்" கச்சேரி "பொம்பயி ஹைகோர்ட்" என்று பெயர் மாற்றப் பெற்றுக் காரிய விவகாரங்களும் உயர்த்தப்பட்டன. அக்காலத்து நமது மாண்டலிகரைப் போல் சிறந்த படிப்பாளி இல்லை. இவர் நியாயவாதவேலையில் தன் மனஸ்ஸாட்சிக்கு கொஞ்சமேனு மாறுசெல்லாது, ராஜாங்கத்தார்க்கு அருவருப்பு இன்றி நடந்து வந்தார். தன்னுடையவேலையில் மிக்கவலை உள்ளவர். பூனுவில் ஓர் "கேஸ்" விஷயமாக "ஹாஜர்" ஆகவேண்டிய காலத்து, "ரயில்" தப்பி விட்டபடியால் நேரம் கழித்துச் செல்லக்கூடாதென்று "ஸ்பெஷல் ட்ரெயின்" வைத்துக்கொண்டு அவ்விடம் சேர்ந்தார். மற்றோர் ஸமயத்தில் பெருஞ்செல்வம் கிடைக்கக்கூடிய கட்சியில் கட்சிக்காரன் ஸரியான ஸமயத்தில் வாராமையால் கட்சிக்காக "ஹாஜர்" ஆகமாட்டேனென்று விட்டனர். மற்றோர்காலம் ரத்நகிரிக்குத் தன்கட்சி விஷயமாகச் செல்ல கப்பல் கிடைக்காதபொழுது தன்னொருவனுக்காகத் தனிக்கப்பல் வைத்துக்கொண்டு சென்

ஞர். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்னுங் குறளடியை மனத்திற்கொண்டார் போல தன் மானமழியாது, வாய்மையழியாதுத் தன்னைக் காத்துக் கொள்வதவரியல்பென்று இனி நாம் சொல்லவேண்டியதேயில்லை.

தனது இனத்தொழிலுடையாரது கஷ்டங்களை நீக்கவும் முயன்றார். அப்பொழுது அஸல் தரப்பு வாதிக்கும்படி எல்லோரையும் விடவேண்டும் என்று மிக உழைத்தார். ஹைகோர்ட்டில் இவரையும் மற்றுமிரண்டுபேரையும் மாத்திரம் விடுவதாகச்சொல்லியபொழுது, அதை தன் முறைமைக்கு மாறுபட்டதென்று மறுத்துவிட்டனர். தன்னை மாத்திரம் கவலைகொள்ளாது, தன்னைப்பற்றிய யாவர்க்கு முழைக்கவேண்டும் என்னும் தீபம் அவர் ஹிருதயத்தில் எரிந்துகொண்டே யிருந்தது. இவ்வாறிருக்கும் ஸமயத்தில் 1884ஆ மாண்டலிகர் ராஜாங்க வக்கீலாக நியமனஞ்செய்யப்பட்டார். இந்த நிலைமையை இவர்தான் முதல் முதல் அடைந்தவர்.

மாண்டலிகர் நியாயவாதி மாத்திரமன்று, பொம்பய் நகரவிசாரணைக் கூட்டத்தொருவராகியும், அமைதி யொழுக்கத்தலைவராகியும் (Justice of peace), பொம்பய் ராஜாங்க ஸர்வகலாசாலைஅங்கத்தினராயும், பொம்பய்ராஜாங்க சட்டநிருபணக் கூட்டத்தங்கத்தினராகவுமிருந்து, நகர்ஸுக நிலைமையையும், ஜனங்களின் ஸுகதுக்கங்களையும்பற்றி மிகக்கவலைகொண்டு உழைத்துவந்தார். நகர விசாரணை ஸபையில் ஒழுங்கில்லாது நடந்துவந்த அக்கிராசனுதிபதியை, தமது ஸத்யத்தைப் பயமின்றிப் பிரகாசிக்கச் செய்யும் சக்தியால், ராஜாங்கத்தாரால் அவ்வேலையிலிருந்து ஒழிக்கும்படிச் செய்து நகர விசாரணைக் கூட்டத்தின் நிலைமையைப் புதுப்பிக்கும்படிச் செய்தனர். தான் அக்கூட்டத்தில் கலந்திருந்த காலத்தில் "துளசிநீர்க்குழாய் வேலை"யைத் துவக்கி ஜலஸுகத்தை ஜனங்களுக்குண்டாக்கினர். இவ்வேலையில் நடுநிலைமையினின்று தவறாது நடந்துவந்தனர்.

மாண்டலிகர் தொழில் வேலையில் மாத்திரம் சிறந்துவிளங்கவில்லை. படிப்பிலும் மிக உழைத்தவர். பலமுறை ஸர்வகலா ஸங்கத்தில் மஹாராஷ்ட்ரம், கூர்ஜரம், ஸிந்துமுதலிய பாஷைகளில் பரீக்ஷகராகவிருந்தனர். இதற்குள் இவர் ஸர்வகலாஸங்கத்து சூழ்ச்சிக்கூட்டத்திலொருவராகச் செய்யப்பட்டு, கலாகுரு (Dean of Arts) என்னும் பட்டமும் அளிக்கப்பட்டார். இப்பட்டம்இந்தியருள் இவர்க்குத்தான் முதலில் கிடைத்தது. இடையே ராஜாங்கத்தாராலும் "ராவ்ஸாஹேப்" என்னும் பட்டமும் அடைந்தார். அப்பொழுதுதான் இவர் ராஜாங்க சட்ட நிருபண ஸபையில் அங்கத்தினராகச் செய்யப்பட்டதும். அங்குத் தனது பயமின்மையாலும், வாய்மை ஒழுக்கத்தாலும், ராஜாங்க கட்சியாரைக் கௌரவமாகத் தடுத்து ஜனங்களது கஷ்டங்களை எடுத்துக்காட்டி வாதித்து வந்தனர். இந்த நிலைமைக்கு மாண்டலிகர் மூன்று முறை வந்தனர்.

ரிப்பன் ப்ரபு இந்தியதேசத்து ராஜ ப்ரதிநிதியாக வந்தகாலத்தில் இவரை இராஜப்ரதிநிதியாரின் சூழ்ச்சிக்கூட்டத்து அங்கத்தினராக ஏற்படுத்தினர். டப்பரின் ப்ரபு பிரதிநிதியாகவிருந்தகாலத்தும் இந்த நிலைமையை மாண்டலிகர் அடைந்தனரென்பது அவர்பால் இராஜாங்கத்தினர்கொண்ட அன்பைக் காட்டுகின்றது. இவர் வருமான வரிச்சட்டம், உப்புச் சட்டம், குடிமுறைமைச்சட்டம் இவைகளைப் பற்றி மிகவுழைத்து ஜனங்களுக்காக நன்மைசெய்ய கஷ்டப்பட்டனர். இவரது படிப்பு முதலிய வெல்லாவற்றையும் எல்லாரு மறிந்தனர். ராஜாங்கத்தார் இவர்க்கு இந்திய தாரகா நேசன் (C. S. I.) என்னும் பட்டம் அளித்தனர். ஜனங்களு மிவர்ஞாபகச்சின்ன

மாக ஓர் தங்கப்பதக்கம் ஸம்ஸ்கிருதபாஷையில் முதலில் வருபவர்க்களிக்கும்படி பொம்பய் ஸர்வகலாஸங்கத்திலேற்படுத்தினர். வேதசாஸ்த்ரோட்ஜ பாடசாலையில் இதேமாதிரியாக ஓர் பரிசு ஏற்படுத்தப்பட்டது,

முன்னமே மாண்டலிகர் பாஷாஞானமுடையவர் என்று கூறினோம். இவர் முதலில் தன் ஸ்வயபாஷையில் மிக உழைத்துவந்தனர். ஆங்கிலத்தில் எட்ஜ்வொர்த் அம்மை (Miss Edgeworth) எழுதிய "லாட்டரி" என்னுங் கதை மஹாராஷ்ட்ர பாஷையிலெழுதி சிறுவயதிலேயே பரிசுபெற்றூர். ஸ்ரீ ஹரிராவ் என்பவரோடுகூடி "ராஜ்யதந்த்ர ஸம்பாஷணை" என்னும் புத்தகமொன்று மஹாராஷ்ட்ரத்தில் எழுதினர். ஹிந்து தேசத்திற்குச் சென்றபொழுது ஹிந்து பாஷையைக்கற்று அதில் ஓர் இலக்கண நூல் எழுதினர். பின் கூர்ஜர பாஷைக்கற்று, மாண்ட் ஸ்வேர்ட் எல்பின்ஸ்டன் (Mount Stuart Elphinstone) எழுதிய இந்திய சரித்திரத்தைக் கூர்ஜரப்படுத்தினர். அதை மஹாராஷ்ட்ரத்திலும் எழுதினர். சட்ட புத்தகங்களனேகம் ஸ்வயபாஷையிலியற்றினர். இடையில் ஸம்ஸ்கிருதம் ஐயமறக்கற்றனர். பூர்வீகவிஷய ஆராய்ச்சியைப்பற்றிய சிலசிறந்த வியாஸங்களை ராயல் ஏஷியாடிக் கூட்டத்தினர் (Royal Asiatic Society) முன்படித்தனர். தன்னுயிர்க்குப் பின்னும் பெருமையும் புகழும் ஒழியாதிருக்கும் வண்ணம் ஹிந்து நியாய சாஸ்திரத்தைச் சுத்தப்படுத்தும்பொருட்டு யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதியை நீலபந்துவின் வியவபாஸூ மாயுபா என்னும் விருத்தியுடனும், ஆங்கில மொழிபெயர்ப்புடனும் பிழையறப்பரிசோதித்துப் பிரசுரஞ்செய்தனர். இவ்வாறு ஜனங்களுக்குதவியதன்றித் தேசநன்மையின் பொருட்டு "ஸ்வதேசாபிப்ராயம்" (Native Opinion) என்னும் வாரப்பத்திரிகை ஒன்றேற்படுத்தி அதற்கும் வேலைசெய்து வந்தார்.

இவ்வாறு உலகத்தவர் யாவரும் புகழும்படி நடந்து, உறவினரும் உற்றவரும் கொண்டாட, குலாசார மொன்றையேனும் வழுவாது முன்னோர் விதிப்படி நடந்தும், ஒழுக்கத்திலுயர்ந்தும், தயாளகுணமும் ஈகைத்தன்மையுங் கொண்டு விளங்கியும் நின்ற நமது மாண்டலிகர் 1889ஹ மேமீ 9உ உலகத்திலிருந்து கொண்ட பூதங்களை அதற்கே அளித்து அதன் கடனை ஒழித்துவிட்டார். அவர் பிரிவு எல்லார் மனதையும் உருக்கியது. இனி அவர் போல் ஒருவர் வருவதென்றோ ?

## ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியாள்

### SRI ADI SANKARACHARYA


மூன்று மாண்டில் முதலை வாய்ப்பட்
டேழா மாண்டி லெழுபிறப் பறக்கநீ
யுலகந் துறந்து வுய்ந்திடின் விடுவே
னென்றது மருமைத் தாயுங் கேட்டுச்
சொன்ன சொல்லும் பழுதுறு வண்ணங்
கன்றிய மனத்துடன் காவியு மீய,
இல்லற மின்றித் துறவறம் பூண்டு
எல்லாக் கலைகளு மெளிதி லுணர்ந்து
புத்த மதத்தைப் புற்றடங்க வைத்துச்
சமண மதத்தைச சன்ம மறுத்துச்
சமயவாதி களைச் சிறகறுத் தோட்டி,
யில்லறமி யாதென வின்விய மாதிற்
திறக்கு மன்ன னிப்பியிற் புகுந்து
குறித்தகாலங் காமநுகர்ந்து கரைகண் டுணர்ந்து,
கணக்கில் வென்றுதம் மாற்றல் காட்டிப்
பல்வகை மதத்தோர் பலவாய்ப் போற்றச்
சாரதா பீடம் சமைவுற விளக்கிப்
பாரிலத் வைதம் பரவச் செய்து
பரமாத் மாவே வுருவெடுத் தாற்போற்
பக்குவ முற்றுப் பக்தர்கள் வணங்கத்
தர்ம மதமாம் பிர்ம்ம மதத்தைத்
தாபனம் செய்த தகமை யுடையோன்
ஸ்ரீமத் சங்கர பாதா சாரியன்
ஏம மலரடி யேற்றித் துதிப்பாம்.

வி. எஸ். மணியம்,


**STUDIES IN ANIMAL LIFE**

# 1. வௌவால்

**BATS**



வௌவாலைப்பற்றி எழுதத் துவக்குங் காலத்து, முதல் முதல் விசாரணை செய்ய ஏற்படும் விஷயம், அது பட்சியா மிருகமா என்பதாம். ஆனால் வௌவாலின் அவயவங்கள் முதலானவற்றைப் பரிசோதித்துப் பார்க்கும்போது இத்தகைய விசாரணை சந்தேகத்திற்குச் சிறிதேனும் இடங் கொடாது. ஏனெனில் அது மிருகமென்றே சொல்வதற்குப் போந்த காரணங்கள் பலவுள. மற்றப்பட்சிகளைப்போல் வௌவாலும் பறக்கின்றதே, அதையேன் பறவையென்று சொல்லலாகாது என்னுங் கேள்வி பிறக்கும். ஆனால் பறக்குந் திறங்கொண்ட ஒவ்வொரு பிராணியையும் பட்சிக்கூட்டத்திற் சேர்ப்பது சரியாமோ? பறக்கும் மீன்களும், பறக்கும் பல்லிகளும் நமது தென்னிந்தியாவிலிருக்கின்றன; அவ்வொரு காரணத்தினாலேயே அவை மீன் கூட்டத்தினின்றும் பல்லிக்கூட்டத்தினின்றும் விலக்கப்பட்டுப் பட்சிக்கூட்டத்திற் சேர்க்கப்படமாட்டா. மற்றும், பறப்பதற்குதவியாகிய வௌவாலின் சிறகிற்கும் பட்சிகளின் சிறகிற்கும் வேறுபாடு பலவுண்டு. பட்சிகளுள் சிறகு என்பது அவற்றின் முன்னங்கால் விகாரப்பட்டு, அதன்மேல் அனேக இறகுகளுண்டாகி, அவ்விறகுகள் ஒவ்வொன்றும் தனித்தனி பிரித்தெடுக்கக்கூடியதாய் அமையப்பெற்ற ஓரங்கமாம். மேலும், இச்சிறகுகளுக்கும், பட்சியின் கால்கள், வால் முதலியவற்றிற்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. வௌவாலிற்கோ, சிறகென்பது, முன்னங்கால் பின்னங்கால் இவற்றின் விரல்கள் மிகுதியாய் நீண்டு அவற்றினிடையே வளர்ந்திருக்கும் தோற்பரப்பேயாம். பறவையின் சிறகைப்போல் பற்பல சிறிய இறகுகளால் ஆகாது, விரல்களினிடையே விரிந்து படர்ந்த மெல்லிய தோலே வௌவாலின் சிறகென்பதாம். இத்தோலானது, முகத்தின் இருபுறங்களிலும் ஆரம்பித்து, முன்னங்கால் பின்னங்கால் இவற்றின் நீண்ட விரல்களையும், வாலையும் உள்ளடக்கிப் பரவிநிற்கும். மேலும், பட்சிகளின் சிறகுகளில் நகமென்பதேயில்லை; ஆனால் வௌவாலின் முன்னங்கால் விரல்களின் நுனியில் கூரிய நகங்களுண்டு. ஆகவே பட்சியின் சிறகுகளுக்கும், வௌவாலின் சிறகென்று சொல்லப்படும் அங்கத்திற்கும் ஏராளமான வித்தியாசமுண்டென்பது மேற்சொன்னவற்றால் நன்கு விளங்கும்.



இனி, வெளவாலுக்கும் மிருகத்திற்குமுள்ள ஒற்றுமையைப் பார்ப்போம். மிருகத்தைப்போல் வெளவாலும் நான்கு கால்கள் கொண்டிருக்கின்றது. ஆனால் வெளவாலானது நடக்குந்திறத்தை விட்டுப் பறக்குந்திறங் கைப்பற்றியதால், அக்கால்கள் மிகவும் நீண்டு மெலிந்து இலேசானதாயிருக்கின்றன. இதன்றி இதை மிருகமென்று சொல்வதற்கு வேறு காரணங்களுண்டு. பறவைகளுக்குப் பற்களில்லை; வெளவாலோ மிருகங்களைப்போல் இருவரிசைப்பற்களுடையது. பறவைகள் யாவும் முட்டையிட்டே குஞ்சுபொறிக்கும்; வெளவாலோ மற்ற மிருகங்களைப்போல, உயிரோடு குட்டிகளை யீன்றெடுத்துப் பின்பு பால்கொடுத்து வளர்க்கும். பறவைகளுக்குச் சிறு துவாரந் தவிர சவ்வான வெளிக்காது கிடையாது. வெளவாலினத்தில், அகண்டுபிரிந்த வெளிக்காதுகளுமுண்டு. இவற்றைத்தவிர பறவைகளுக்கும் வெளவாலுக்கும் வித்தியாசத்தை விளக்கிக்காட்டும் வேறு அங்க விபாகங்களிருப்பினும், அவை பிரதானமற்றவையாதலால், ஈங்கெடுத்து விவரிக்காதுவிட்டனம்.

வெளவாலானது பகற்காலங்களில் இருட்டான விடங்களையே விரும்பி மறைந்திருந்து இராக்காலங்களிலேயே வெளியேறிச் சஞ்சரிக்கும். அதன் கண்கள் மிகச்சிறியன. ஆனால் அதன் மூக்கும், காதும் வெகு தீர்க்கமாய் வளர்ந்திருக்கின்றன. சில வகை வெளவாலில் மூக்கைச்சுற்றி இலைகளைப்போன்ற உபாங்கங்கள் பலவுண்டு. அவற்றைக்கொண்ட வெளவாலின் முகம் மிகக்கோரமாயிருக்கும். அவை வெளவாலின் மோப்பு உணர்ச்சியை மிகுதியாக்குந் திறனுடைத்தென்பதற்கு ஐயமில்லை. இங்கிலாந்தில் வசிக்கும்வெளவாலினம் ஒன்றில் (Plecotus auritus) அதன் காதும், உடம்பும் ஒரேநீளமுள்ளதாம். கண்ணின் பார்வை மிகக்குறைந்திருப்பதினிமித்தம், காதும் மூக்கும் பூரணமாய் அமைந்திருக்கின்றன போலும். இராக்காலத்து வெளியேறிச் சிறுபூச்சிப் புழுக்களைத்தின்று ஜீவிக்கும். ஒருஜாதி வெளவால் மரங்களின் பழத்தைத்தின்று காலங்கழிக்கும். அமெரிக்காவில் வசிக்கும் மற்றொரு ஜாதி வெளவால் வேறுமிருகங்களின் உதிரத்தைக் குடித்து உயிர்பிழைக்கும். வெளவாலானது இருண்டவிடங்களில் தங்கும்போது கால்நகங்களினுதவியால் கட்டடத்தின் மேற்புறத்தைப் பற்றிக்கொண்டு தலை கீழாகத்தொங்குகின்றது என்பது யாவருமறிந்த விஷயம். அது அந்நிலையிலிருக்குங்கால், அதன் வாயானது கீழ்ப்புறம் நோக்குமல்லவா? அப்போது அது மலஞ்சலம் போக்குமாயின் வாயினாலே அங்ஙனஞ் செய்கிறது என்ற கொள்கை நம்மவரிற் பலரும் கொண்டிருக்கின்றார்கள். அக்கொள்கை மிக்க பிழையுற்றதென்பதற்கு

அத்தாட்சியாக வௌவாலொன்றைப் பிடித்துச் சற்றுப்பரீட்சித்துப் பார்ப்பார்களானால், வாய் வேறு அபானம் வேறு என்று எளிதில் அறிவார்கள்.

வௌவால்களுள் சுமார் நூறு இனங்களுக்கு மேலுண்டு. நமது வீடுகளிலும் கோயில்களிலும் வசிக்குஞ் சிறிய வௌவாலுக்குத் துரிஞ்சில் என்று பெயர். இரத்தங் குடிக்கும் அமெரிக்க வௌவாலுக்கு உதிரமாகாளி என்று பெயர். இன்னும், ஆசியா ஆபிரிக்கா கண்டங்களில் வசிக்கும் பெரிய வௌவால்களுக்குப் பழந்தின்னி என்று பெயர். இவ்வினத்திற் சேர்ந்ததும், ஜாவா தீவில் வசிப்பதுமான காலாங் என்னும் வௌவாலே எல்லாவற்றினும் மிகப்பெரிது. ஏனெனில் அதன் சிறகை விரித்து ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிக்கு அளக்க, ஐந்தடிக்கு மேற்பட்ட அகலமுள்ளதாகவிருக்கும்.

வெ. நரசிம்மன், எம்.ஏ., பி.எல்.

சோதித்துப் பார்த்தபின் அபிப்பிராயங் கொள்.—சிலருக்கு மற்றொருவர் முகத்தைக் கண்டால்பிடிக்காது. அவனைக் கண்டால் வெட்டிவைக் கலாம்போல் தோன்றும். அந்த மனிதன் வெகு யோக்கியனுகவிருக்கலாம். அவனைப்பற்றி நாம் தீர விசாரித்திருந்தால் அவனை நமது குருவாக நாம் அங்கீகரித்துக்கொள்ள நமக்குப் புத்தி தோன்றலாம். அப்படியிருக்க அவன் முகத்தைக் கண்ட மாத்திரத்தில் அருவருப்புற்று அவனைத் துவேஷிப்பது நமக்கு எவ்வளவு பெரும்பாவம். எந்தவிஷயம் எப்படியிருந்தபோதிலும் நாம் சோதித்தே அபிப்பிராயங்கொள்ளவேண்டும். சோதித்தல் என்பது தான் உள்ளத்தைத் திறக்கும் திறவுகோல். இவ்வாறு சோதனை என்பதேயில்லாமல் திடீரென்று பார்த்தமாத்திரத்தில் ஒருவனிடம் நல்ல எண்ணமும் கெட்ட எண்ணமும் கொண்டு நியாயத்துக்கு விரோதமாய்ப் பலர் நடக்கின்றார்கள். இது அக்கிரமம்; பாவத்தையும் அவமானத்தையும் விளைவிக்கும்.

பண்டிதர் நடேச சாஸ்திரி.

# நட்பு

## FRIENDSHIP

சில வாலிபர்கள் சிறிதும் கபடமில்லாமல் உலக வழக்கம் கொஞ்சமேனும் தெரியாதவர்களாயிருக்கின்றனர். இவர்களிடம் யாராவது போக்கிரி அல்லது துஷ்டன் வந்து சேர்ந்துகொண்டு பரம மித்திரன்போல் காட்டுவானேயானால் அதைக் கபடமென்று சிறிதேனும் எண்ணாமல் அவனை முற்றிலும் நம்பிவிடுகிறார்கள். அவனிடத்தில் அதிக நம்பிக்கை வைத்துவிடுகிறார்கள். கடைசியாய்க் கைப்பொருள்களையெல்லாம் இழந்து அவஸ்தைப் படுகிறார்கள். ஆகையால் இவ்விதமான கபட நேசர்களை யொருநாளும் நம்பலாகாது. அவர்கள் உன்னிடத்தில் எவ்வளவு வேஷத்துடன் வருகிறார்களோ நீயும் அவ்வளவு வெளி மரியாதையுடன் அவர்களைப் பெற்றுக்கொள். பேச்சுமட்டும் இன்பமாய்ப் பேசலாம். நம்பிக்கை யென்பதை யொருநாளும் வைக்கலாகாது. உண்மையான சிநேகம் திடீரென்ருவது சொற்பகாலத்திற்குள்ளாவது உண்டாகமாட்டாது. அது கொஞ்சங் கொஞ்சமாய் நாளடைவிலே உண்டாகவேண்டும். சிநேகிப்பவர்கள் இருவர்களிடமும் ஒரேவித நற்குண நற்செய்கைகள் இருந்தாலொழிய சிநேகமென்பது அவர்களுக்குள் வேரூன்ருது. அன்றியும் முதலில் நாம் பார்க்கும்பொழுதே எவன் நம்மிடம் அதிக அன்பைக்காட்டுகிருனே அவன் சிநேகம் நாளுக்குநாள் குறைந்து கடைசியில் கபடவேஷமாய் முடியும். நல்ல சிநேகமென்பது அப்படியில்லாமல் முதல்முதல் மிகவும் சூக்ஷமாயும் கொஞ்சங் கொஞ்சமாயும் ஆரம்பித்து நாளாக நாளாக நன்ருய் வேரூன்றி நிற்கும்.

சிலர் சிறிதுகாலம் அந்யோந்ய சிநேகமாயிருப்பார்கள். இவர்கள் யாவர்களென்ருல்

குடி அல்லது குடிசை நுழைதல் முதலான கெட்ட நடத்தைகள் உள்ளவர்களாம்; இந்தக் கெட்டநடத்தைகளே இவர்களுடைய சிநேகத்திற்கு முதலில் காரணங்களாகின்றன. ஐயோ அநியாயம்! இதையும் சிநேகமென்று சொல்லுகிறார்களே! நல்நடத்தைகளைக் கெடுக்க வந்த சண்டாளர்களென்று ராஜாங்கத்தார் இவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுகிறார்களே! இவர்கள் முதலில் ஒருவருக்கொருவர் சகாயமாய்க் கடன் கொடுத்துக்கொள்வார்கள்; சண்டை சச்சரவுகளில் ஒருவரையொருவர் பாதுகாத்து வருவார்கள்; பிறகேதாவது ஒரு சங்கடகாலத்தில் ஒருவன் மற்றொருவனை விட்டுவிட்டுத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு பொய் சொல்லவேண்டுமோ அவ்வளவையும் சொல்வான். ஒரு மனிதன் "சத்தியமாய், ஆணைப்படிக்கு" என்றே ஒரு சமாசாரத்தை நீ நம்புதலின் பொருட்டுச் சொல்ல ஆரம்பிப்பானேயானால் அவன் உன்னை மோசம் செய்ய வந்தவனென்று நிச்சயமாய் எண்ணு. அவன் சொல்லப்போகிற சங்கதியில் உண்மையில்லாததனாலல்லவோ சத்தியம், ஆணை முதலான மொழிகளை அவன் முறைபிடுகிறான். இப்படி அவன் செய்வதெல்லாம் நமக்கு நம்பிக்கை யுண்டாகும்பொருட்டே யாதலின் அதை நாம் ஒருநாளும் நம்பக்கூடாது. அவன் சொல்லும் பேச்சில் உண்மையிருக்கும் பக்ஷத்தில் சத்தியம், ஆணை முதலியவைகளை யெடுத்துக் கூறுவானேன்?

அறிமுகம் நேசம் இவ்விரண்டையும் நாம் நன்றாய்ப் பகுத்தறியவேண்டும். சிலர் நமக்கு அறிமுகமாய் இருக்கலாம். அவர்களை அவ்வளவுடனே வைத்துக்கொள்ளவேண்டுமேயல்லாது நமது சிநேகிதர்களென்று ஜனங்கள் சொல்ல இடங்கொடுக்கக்கூடாது. ஒருகால் மதிமயங்கி நாம் அப்படிச் செய்வோமேயானால் அது நமக்குப் பின்னால் கெடுதியாய் முடியும். நீ யாருடன் சிநேகம் பண்ணுகிறாயோ அவர்களுடையயோக்கியதையைக்கொண்டு ஜனங்கள் உன் யோக்கியதையையும் நிச்சயிப்பார்கள். "நீ யாருடன் இணங்கி இருக்கிறாய் சொல்லு, உன் யோக்கியதையை நான் சொல்லிவிடுகிறேன்" என்று ஒரு பழமொழி ஸ்பெயின் தேசத்தில் வழங்கி வருகிறது. அதற்குச் சரியாக நமது தேசத்து ஔவை என்னும் சீமாட்டியும் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர் கற்றிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" என்றுசொல்லியிருக்கிறாள். இந்தவசனங்களின் முக்கிய கருத்தாவது படித்தவர்கள் படித்தவர்களோடும் படியாத மூடர்கள் மூடர்களோடும் சேருவதுபோல ஒரேகுணமுள்ளவர்களே ஒருவரோடு ஒருவர் சேருவார்களென்பதேயாம். இந்தக் கருத்தை உத்தேசித்தே ஒருவன் யாரோடு இணங்கியிருக்கிறானோ அவர்கள்பேரைச் சொன்னாலே அவனது குணத்தைத் தெரிந்துகொள்ளலாமென்னும் அர்த்தமுள்ள ஸ்பெயின் தேசத்துப் பழமொழியும் ஒன்று வழங்கிவருகிறது.

நாம் ஒரு போக்கிரியுடன் அதிக சகவாசம் வைத்துக்கொண்டால் நம்மையும் ஜனங்கள் போக்கிரியென்று ஏன் சொல்லக்கூடாது. ஆகையால் கெட்டவர்களுடன் நாம் சேரவேகூடாது; அவர்களுடன் நாம் சேரக்கூடாதென்பதால் அவர்களைச் சத்துருக்களாகப் பண்ணிக்கொள்ளவேண்டுமென்பதல்ல; அவர்களிடம் நமக்கு சிநேகமும் வேண்டாம், சண்டையும் வேண்டாம். அவர்கள் குணத்திற்காக நமது மனதில் வெறுப்பிருப்பினும் அவர்களை நாம் நேரே காணும்பொழுது முகத்தில் சிரிப்பு இருந்தால் அதனால் யாதொன்றும் குறைந்துபோகாது. மனதிற்குள் ஒவ்வொருவருக்கும் அடக்கமான அபிப்பிராயமிருக்கவேண்டியது அவசியமே; வெளியில் மாத்திரம் எல்லாருடனும் கலகலப்பாய் இருக்கவேண்டும். கலகலப்பாய் இராமல் கடுகடுப்பாய் இருப்போமேயானால் அது மிகவும் தின்


பங்களை விளைவிக்கும். அதிக கலகலப்பும் கூடாது, முற்றிலும் கடுகடுப்புங் கூடாது; இவ்விரண்டிற்கும் நடுநிலை ஒன்றுண்டு. அதைத் தெரிந்து நடப்பவர்கள் க்ஷேமத்தை அடைவார்கள்; தெரியாதவர்களோ பிரயோஜனமற்றவைகளில் வெகு அடக்கமாயிருந்து ஜனங்களுடைய விரோதத்தைச் சம்பாதிப்பார்கள்; தங்களுக்குத் தெரிந்தவைகளைக் கண்டவர்களிடமெல்லாம் சொல்லித் தங்கள் மதிப்பைக் குறைத்துக்கொள்ளுவார்கள்.

பண்டித நடேச சாஸ்திரி.

# திருமயிலை அறுபத்துமூவர் உத்ஸவம்

## ARUPATHUMOOVAR AT MYLAPORE

(All rights reserved).



திருமயிலை அல்லது மயிலாப்பூர் என்பது சென்னப்பட்டணத்தின் தென்புறத்தில் கடற்கரையோரமாக இருக்கும் ஓர்பாகம். இதில் பட்டணத்து வக்கீல்கள் அநேகர் வசிக்கின்றனர். இங்குப் பெரிய பணக்காரர்களும் ஸாதாரணமாகத் தமது வரவிற்கும் செலவுக்கும் ஸரியாகப்போகும் ஜனங்களும் அதிகமே ஒழிய நடுநிலைமையிலிருப்பவர்கள் அதிகமில்லை. இப்படி இருப்பினும், இந்தப்பாகத்திற்கு விசேஷம் இதன் கோயிலே. கபாலீசுவரனும், கற்பகவல்லியும் இங்குத் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கின்றனர். இங்குப் பகவான் மேற்கு நோக்கி இருக்கின்றார். கோயிலின் மேற்குப்புறத்தில் ஓர்பெரிய திருக்குளம் இருக்கின்றது.

இந்த ஸ்தலத்திற்கு அநேகவிதமான மஹத்வங்கள் உண்டு. இங்குத் தான் அம்மன் (பார்வதிதேவி) மயிலாயிருக்கும்படி நேர்ந்தகாலத்து பரமசிவத்தைப் புன்னைமரத்தடியிற் பூஜித்து மயிலுருவம் நீங்கி பகவானோடு சேர்ந்தது (இது பிரம்மோத்ஸவத்தில் இங்கு முதல்நாள் இரவு கொண்டாடப்பட்டு வருகின்றது). இங்குத் தான் அறுபத்துமூவருள்ஒருவரும் மானஸ பூஜையாலேயே பரமபதம் பெற்றவருமாகிய வாயிலா நாயனார் அவதரித்துப் பரமபதம் பெற்றது. (இவர் சரித்திரத்தை விவேகபோதினி 2-ம் தொகுதி 9-ம் பகுதி சிறுவர்க்கானபக்கத்தில்காண்க). இங்குத் தான் திருக்குறள் செய்தவராகிய மஹா ஞானியான திருவள்ளுவநாயனார் அவதரித்து வாழ்ந்தது. திருமயிலை கீழ்கோபுரத்திலிருந்து நேரே வடக்கேபோகும் பாதையே போனால் ஓர் பெருமாள் கோயில் பின்புறமாகப்போகும். அது தாண்டியதும் பாதைக்கு மேல்புறம் காணப்படும் ஓர் சிறுகோயிலே திருவள்ளுவர் கோயில். வைஷ்ணவ மரபின்படி நோக்கிலும் இது திவ்ய ஸ்தலம் தான். முதலாழ்வார் மூவருள் பேயாழ்வார் பிறந்து பரமபதம் பெற்றதும் இங்கேதான். ஆழ்வார்கள் பாடல்கள் நாயன்மார் பாடல்கள் இவைகளிலிருந்து அவர்கள் காலத்தில் இம்மயிலை சிறப்புவாய்ந்த பட்டணமாக இருந்ததென்றும், இவ்வூர் நத

வீதியில், உத்ஸவகாலங்களில் தர்சனம் செய்யவரும் அடியார்களுக்கும் கோயிலுக்கும் உபயோகப்படும்படியான அநேக சத்திரங்கள் நடைபெற்று வந்தன என்றும் தெரியவருகிறது.

இந்தத் திருமயிலையில் வருஷம் ஒருமுறை பங்குனி உத்தரத்தை ஒட்டி ஓர் பிரம்மோத்ஸவம் நடப்பது உண்டு. அதில் எட்டாம் திருநாளுக்கே அறுபத்துமூவர் உத்ஸவம் என்று பெயர். அன்று பகவான் அறுபத்துமூன்று நாயன்மாரோடு மாலை 3-மணிக்குத் திவ்யஸேவை அளிப்பது வழக்கம். இந்த உத்ஸவம் மிகுந்த கோலாஹலமாக, அநேக ஜனங்களால் தர்சிக்கப்பட்டும், இவ்வூரை மிகச் சிறப்புற்று விளங்கும்படியாகச் செய்யும் தர்மங்கள் விசேஷ ஐதிகங்கள் முதலியவைகளோடு ஸம்பந்தப்பட்டும், இருப்பதால் இதைப்பற்றி யாவரும் நன்றுகக் கூடியவரையில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆதலால் இதை இங்கு எடுத்து விவரிக்கலானோம்.

இவ்வுத்ஸவத்தோடு ஸம்பந்தப் பட்டிருக்கும் பெரியபுராண கதை பின்வருவது. பார்வதிதேவியிடமிருந்து ஞானப்பால் உண்டு, உலகில் ஸன்மார்க்கத்தை நிலைநிறுத்திய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் அவதாரமாகிய திருஞானஸம்பந்த ஸ்வாமிகள் காலத்தில் திருமயிலையில் வைசியர் குலத்தில் சிவநேச செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெயருக்கேற்றபடி அவர் சிவபெருமான் சிவனடியார்கள் ஆகிய இவர்களிடம் பக்தி செலுத்தி ஸதா பரிசுத்தராக இருந்தார். இவருக்குப் பணமும் ஏராளமாக இருந்தது. இவர் திருஞானஸம்பந்தஸ்வாமிகள் செய்த திவ்யச்செயல்கள், ஸன்மார்க்க ஸ்தாபனம் செய்தவழிகள் முதலியவைகளைக் கேள்விப்பட்டு அவரிடம் சிறந்த அன்பு பாராட்டி வந்தார். ஆனால் அவரைப் பார்க்கமாத்திரம் செட்டியாருக்கு ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஒவ்வொருநாளும் செட்டியாரிடம்வந்து எட்டும் திருஞானஸம்பந்தரது அற்புதச் செய்கைகளெல்லாம் அவருக்கு ஸம்பந்தர் மேலிருந்த அன்பை அதிகப்படுத்தியது.

இப்படி இருக்கையில் இவருக்கு வெகு காலத்திற்குப்பின்பூம்பாவை என்றொரு அருமைப்பெண், பிறந்தாள். இவள் சிவபக்தி மிகுந்தவளாய் வளர்ந்து வரும்நாளில் திருஞானஸம்பந்தரது அற்புதச்செயல்களில் அநேகம் சிவநேச செட்டியார் காதில் வந்து எட்ட, அவர் ஆனந்த பரவசத்தில் தன் பெண் சொத்து முதலியவைகள் எல்லாவற்றையும் ஸம்பந்தஸ்வாமிகளுக்கு அர்ப்பிதம் செய்தனர். இவ்வாறு இவர் ஸம்பந்தஸ்வாமிகளின்மீது அன்புவளர்த்து வரும் நாளில், இவர் அருமைப்பெண் பூக்கொய்ய தோட்டத்திற் போனவிடத்து பாம்புகடித்து இறந்தாள். சிவபக்தி விஷயத்தில் தன் பெண்ணிடம் இருந்தபற்றால் செட்டியார் சற்றுத் துக்கித்துவிட்டுத், தன்பெண்ணைத் தகனம்செய்து ஸம்பந்தஸ்வாமிகள் திருமயிலைக்கு வருங்கால் அவர் பாதத்தில் அவள் எலும்பை அர்ப்பிதம் செய்வதாக எண்ணி, அதை ஓர் பானையில் இட்டு அதையே தன் பூம்பாவையாகப் பாவித்துத் தகுந்த மரியாதைகள் செய்து கொண்டுவந்தார்.

இவ்வாறு கொஞ்ச நாளாக, திருமயிலைக்கு வடக்கிலுள்ள திருவொற்றியூரில் ஸ்வாமி தர்சனத்திற்காக ஸம்பந்தஸ்வாமிகள் எழுந்தருளியிருப்பதாகச் செட்டியாருக்கு ஸமாசாரம் எட்டியது. உடனே அவர் ஸம்பந்தஸ்வாமிகளுக்குத் தகுந்த மரியாதைகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, அவரை எதிர்கொண்டழைத்து வர செட்டியார், திருவொற்றியூரை நோக்கிப் புறப்பட்டார். இதற்குள்ளாக ஸம்பந்தஸ்வாமிகளும் திருமயிலைநோக்கிப் புறப்பட்டுவிட்டார். இருவரும் வழியில் ஸந்தித்தனர். செட்டியார் ஆனந்தபரவசராகிக் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டதே' என்று மனங்களித்தார். இருவரும் வார்த்தையாடி வருகையில் செட்டியார் தன் பெண் விஷயத்தை முழுவதும் சொல்லி அவள் எலும்பைக் கிருபைகூர்ந்து அங்கீகரிக்கவேண்டும் என்று ஸம்பந்த ஸ்வாமிகளை வேண்டிக்கொண்டார். இதைக் கேட்டுக்கொண்டு ஸம்பந்த ஸ்வாமிகள் மயிலை வந்து சேர்ந்து, ஸ்நானம் முதலியவைகளை முடித்துக் கொண்டு கபாலீசுவரரைச் செட்டியாருடன் தர்சித்து ஸந்நிதியில் வந்து, செட்டியாரைத் தன் பெண் எலும்பைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.

செட்டியார் அந்த எலும்புப்பாத்திரத்தைப் பல்லக்கில் ஏற்றிச் சீர்முதலியவைகளோடு எடுத்து வந்து பகவத்ஸந்நிதானத்தில் வெளியில் கொண்டு நிறுத்தினார். அப்பொழுது அங்குச் சிவபக்தர்கள் எல்லோ

ரும் வந்து கூடினர். ஆகாயத்தில் தேவர்கள் முதலி யோர் எல்லோரும் வந்து கூடினர். எல்லோரும் மிகுந்த ஆவலுடன் என்ன நடக்கப்போகிறதென்று கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கையில், சிவபிரானை மனதிலே தியான மூலமாக அமைத்துக்கொண்டு அந்த பலத்தால், 'சிவனடி யார்களுக்குத் தொண்டுசெய்தலும், சிவபெருமான் திருவிழாக்கண்டு ஆனந்தித்தலுமே, துர்லபமான மானிடப் பிறவியின் பயன் என்பது உண்மையா யில் இப்பூம்பாவை உயிருடன் எழட்டும்' என்று சபதம் செய்துகொண்டு ஸம்பந்த ஸ்வாமிகள் பின்வரும் பதிகத்தைப்பாடி அருளினர்.

## * திருமயிலாப்பூர்—பூம்பாவாய் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். 1

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோணவிழாவுமருந்தவர்க
ளெய்ப்பனவுங்காணாதேபோதியோபூம்பாவாய். 2

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்சரத்தான்றொல்கார்த்திகைநாட்
டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய். 3

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
னாதிரைநாள்காணாதேபோதியோபூம்பாவாய். 4

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா [டுந்
னெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டா
தைப்பூசங்காணாதேபோதியோபூம்பாவாய். 5

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணாதேபோதியோபூம்பாவாய். 6

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணாதேபோதியோபூம்பாவாய். 7

தண்ணாவரக்கன்றோள்சாய்த்துகந்ததாளினான்
கண்ணார்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார்பதினெண்கணங்கடம்மட்டமிநாட்
கண்ணாரக்காணாதேபோதியோபூம்பாவாய். 8

நற்றாமரைமலர்மேலான்முகனுநாரணனு
முற்றாங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணாதேபோதியோபூம்பாவாய். 9

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாந்திகாணாதேபோதியோபூம்பாவாய். 10

திருச்சிற்றம்பலம்.

இப்பாட்டுப்பாடி வருகையில் முதலில் பூம்பாவை உருவம் பெற்றுப் பின்னர் முறையே பன்னிரண்டுவ யது வரையில் வளர்ந்தமுடிவில் மிகுந்த அழகிய உரு வத்தோடு அவள் குடத்தைவிட்டு வெளிவந்தாள். எல்லோரும் கண்டு வியந்தனர். சிவநேச செட்டி யார் ஆனந்தபரவசமாகி ஸம்பந்த ஸ்வாமிகள் காலில் விழுந்து தாம் முன்னர் செய்த பிரதிக்கினைப்படி தன் பெண்ணை ஸம்பந்தஸ்வாமிகளுக்கு அர்பித்துப் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அதற்கு ஸம்பந்த ஸ்வா மிகள் செட்டியாரை நோக்கி 'நீர் இப்பூம்பா வையைப் பெற்றெடுத்ததால் அவளுக்குப் பிதா

* இப்பதிகத்தில் 2-ம் பாட்டு முதல் 10-ம் பாட்டு வரையில் ஒவ்வொரு பாட்டிலும் மயிலாப்பூரில் ஒவ் வொருவருஷத்திலும் முன்னர் நடந்துவந்த உத்ஸவங்கள் ஒவ்வொன்றையும் பற்றிக் கூறியிருக்கிறது. இப்பாகங் களெல்லாம்தடித்த எழுத்தில்இங்குஅச்சிட்டிருக்கிறது. இவைகளுள் 3 முதல் 7-பாட்டு வரையில் உள்ள உற்ஸ வங்கள் இப்பொழுதும் நடந்து வருகின்றன. இவைக ளுள் 7-ம் பாட்டில் கூறப்பட்டிருக்கும் ஒலி விழாவாகிய பங்குனி உத்தர விழாவே இவ்வூர் பிரம்மோத் ஸவம். இதில் பிக்ஷாண்டர் வேஷம் (பலிவிழா) மிக முக்கிய உத்ஸவம் என்று தெரியவருகிறது.

அதுபோல இறந்த அவளை மறுபடி உயிரோடு எழும்படி செய்த நானும் அவளுக்குப் பிதாவாகவேண்டும். ஆதலால் நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வது தகுதியல்ல,' என்றுபேக்ஷித்தார். செட்டியாரும் அவர் உறவினர்களும் மிகுந்த துக்கத்திற்கு ஆளாகித் தத்தளிப்பதைக்கண்டு, ஸம்பந்தஸ்வாமிகள் வேதத்திலிருந்து நியாயம் காட்டி அவர்களைத் தேற்றி, திருமயிலைவிட்டு வேறு திருப்பதிகளைத் தரிசிக்கப் புறப்பட்டனர். ஸம்பந்தஸ்வாமிகளுக்கென்று குறிக்கப்பட்டமையின் பூம்பாவையைசெட்டியார் வேறொருவருக்கு விவாஹம் செய்து கொடுக்காமல்விட, அவள் வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவேயிருந்து பரமபக்த சிரோமணியாக விளங்கி முடிவில் பரமபதம் பெற்றாள்.

இனி இக்கதையின் ஐதிகப்படி மயிலாப்பூரில் எட்டாம் திருவிழாவன்று நடத்தப்படும் கோயில் காரியங்களை எடுத்துக்கூறுவோம். எட்டாம் திருவிழாவன்று காலை 8-மணிஸுமாருக்கு திருஞானஸம்பந்த ஸ்வாமி கோயிலிலிருந்து எழுந்தருளி ரதவீதி வழியேவந்து பெரிய குளம் மேலண்டைக்கரையிலுள்ள படித்துறையில் போட்டிருக்கும் தென்னண்டைப்பந்தலில் இறங்குவார். இதற்குமுன்னமேயே சிவநேச செட்டியாரையும் குளம் மேல்துறையிலிருக்கும் வடவண்டைப் பந்தலில் கொண்டுவந்து வைத்திருப்பார்கள். அன்று அதிகாலைஸூர்யோதயத்திற்கு முன்னமேயே பூம்பாவையை அலங்கரித்துத் திரையால்மூடப்பட்டு மேலண்டைவீதி வடக்கு மூலையில் உள்ள ஓர் பந்தலில் வைத்திருக்கும். ஞானஸம்பந்தரும் செட்டியாரும் குளத்தில் ஸ்நானம் முதலியவைகள் செய்து ஸ்வாமி தர்சனம்செய்யத் தயாராவதாகப் பாவனை உடன், அவர் விக்கிரஹங்களுக்கு அபிஷேகம் அலங்காராதிகள் செய்யப்படும். இவைகள் எல்லாம் முடிய நடுப்பகல் 1-மணியாகும். உடனே செட்டியாரும், ஸம்பந்த ஸ்வாமிகளும் புறப்பட்டுக் கோயிலுக்குச்சென்று ஸ்வாமி தர்சனம்செய்யப்போவார்கள். பின்பு மேலண்டை வீதி ஸ்வாமி ஸந்நிதிக் கெதிரில் வைக்கப்பட்டிருக்கும் பூம்பாவை விமானத்தருகில், செட்டியாருடன் ஸம்பந்த ஸ்வாமிகள் வந்து நிற்பர். உடனே பூம்பாவைக்குரிய சீர்கள் எல்லாம் உள்ளூர் திருவண்ணாமலை மடாதிபதியால் எடுக்கப்பெற்று வந்து சேரும். பின்னர் கோயில் ஓதுவார் முறையே முன் எடுத்து எழுதியுள்ள பூம்பாவைத் திருப்பதிகம் பாடுவர். ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் ஸம்பந்த ஸ்வாமிகளுக்குக் கற்பூரஹாரத்தி செய்யப்படும். பதிகம் முடிந்ததும் பூம்பாவை விமானத்தை மறைத்திருக்கும் திரை நீக்கப்பட, உள்ளிருக்கும் அலங்கரித்தபூம்பாவை விக்கிரஹத்திற்கும் ஸம்பந்த ஸ்வாமிகளுக்கும் தீபாராதனை நடைபெறும். இதன் பின்பு ஸம்பந்தஸ்வாமிகள், செட்டியார், பூம்பாவை ஆகிய மூவரும் புறப்பட்டுக் கோயில்பக்கம் போக அங்குக் கபாலீசுவரர் அறுபத்துமூன்று நாயன்மாருடன் வந்து நிற்பர். மூன்று பெயர்களும் கோயிலுள் சென்று மூலலிங்கத்தை ஆராதித்தப் பின்னர் உத்ஸவமூர்த்திவலம் எதிரேநிற்க, பகவான் இம்மூன்றுபெயர் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆகிய இவர்களுடன் மாலைமூன்றுமணிக்குத் திருமயிலைவீதியில் ஆனந்தபவனிபுறப்படுவர். பூம்பாவையை எழுப்புங்கால் ஸகல தேவதைகளும் அடியார்களும் வந்திருந்ததாகக் கூறியிருக்கும் கதையின்படி நடத்தப்படும் ஐதீகம் இதுவே. இந்தத் திருவிழாவன்று ஸ்வாமிகோயிலுள்சென்று இறங்கும்முன்ஸூர்யாஸ்தமன ஆகிவிடும். சென்றநாலைந்து வருஷமாக, இவ்வூர் திருவள்ளுவர் கோயிலிலிருந்து திருவள்ளுவ நாயனாரும் எழுந்தருளப்பண்ணப்பெற்றுக்கபாலீசுவரர்பின்னர் இந்த எட்டாம் திருவிழாவன்று 64-வது நாயனாராக வந்துகொண்டிருக்கின்றனர்.

இத்திவ்ய உத்ஸவத்தைக்கண்டு ஆனந்திக்கவரும் ஜனங்களைப்பற்றிச் சற்றுவிசாரிப்போம். இந்த உத்ஸவம் பார்க்கவரும் ஜனங்கள் சற்றேறக்குறைய 4-அல்லது 5-லக்ஷத்திற்கு இருக்கும். இவர்கள் காலை 9-மணிஸுமார் முதல்கொண்டு மாலை 5-மணி வரையில் வந்துகொண்டேயிருப்பார்கள். நடுப்பகல் 11-அல்லது 12-மணிக்குள் மயிலாப்பூர் நிறைந்துவிடும். 1-அல்லது 2-மணி ஸுமாருக்கு மயிலாப்பூருள் வண்டிகளை விடுவதில்லை. கூட்டம் அவ்வளவு அதிகமாகிவிடும். இந்த உத்ஸவத்தில் நடைபெறும் விருஷபோத்ஸவம், பிக்ஷாடனர் வேஷம் இவைகளில் நடக்கும் பாணவேடிக்கைகள் இந்த எட்டாம் நாளில்லை. இந்த உத்ஸவம் ரதோத்ஸவம்போல காலையில் சீக்கிரம் முடிவதுமல்ல. இப்படி இருப்பதால் ஜனங்கள் அதிகமாகக்கூடுவதற்கு, பகவத்தர்சனம் செய்யவேண்டும் என்ற ஆவல் தான் காரணம் என்பது வெளியாகும்,

வரும் ஜனங்களுக்கு என்னவேலை என்பதைக் கூறவோம். ஜனங்கள் வந்ததும் கோயிலில் உள்ள மூலஸ்தானம், அதன் எதிரிலிருக்கும் மண்டபத்தில் வைத்திருக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்கள், வெளியே புறப்பட அலங்கரித்து வைத்திருக்கும் உத்ஸவமூர்த்திகள், ஞானஸம்பந்தஸ்வாமி முதலிய விக்கிரஹங்களுக்குத் தேங்காய் உடைத்துச் செய்ய வேண்டிய மரியாதை செய்தல், பின்னர் மயிலாப்பூரில் அன்று நடைபெறும் தர்மசத்திரங்களில் போஜனம் செய்தல், மாலை இரண்டுமணிக்குத் திருமயிலைப் பதிகம் பாடி பூம்பாவையை அக்கியருளும் வைபவந்தைக்கண்டுகளித்தல், பின்னர் 4-மணிக்கு ஆனந்தபவனிவரும் ஸ்ரீ கபாலீசுவரஸ்வாமியைக் கண்டுபரவசமாதல் ஆகிய இவைகளே. அன்று உடைபடும் தேங்காய்களுக்குக் கணக்கேயில்லை. அன்று மயிலாப்பூர்வரும் பக்திமான்களுக்கு, அன்று பகல்முழுவதும் பகவத் விஷயமான தொழிலே இருக்கும். அன்றாவது சற்றுத் தமது லௌகிக விஷயங்களை மறந்து நிற்க ஜனங்களுக்கு ஸமயம் வாய்க்கும். ஸதா ஒருவருக்கொருவர் ஸம்பந்தஸ்வாமிகள், பரமசிவம், இவர்களின் வைபவத்தையே சொல்லிக்கொண்டு காலங்கழிப்பார். இவ்வாறு அநேக ஜனங்களை ஒரேகாலத்தில் உலகப்பற்றைச் சற்று மறந்து நிற்கும்படி செய்யும் திறனுடையது இந்தத் திவ்ய உத்ஸவம்.

இனி இந்த எட்டாம்நாள் நடைபெறும் தர்மங்களைப்பற்றிக் கூறுவோம். இந்த உற்ஸவத்தன்று ஸுமார் நடுப்பகல் 12-மணிக்கு நாம் வெளியே புறப்பட்டுக் கூட்டத்தைக் கவனியாது மயிலாப்பூர் ரதவீதியை ஒருதரம் சுற்றிவந்தால், அநேகவித தர்மங்களைக் கண்ணாரக்கண்டு களிக்கலாம். வீதிகளில் குளக்கரை ஓரமாக வருபவர் ஸ்வாமி புறப்பட்டு வரும்வரையில் தங்கி இளைப்பாறுவதற்காக விஸ்தாரமான அநேக தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்பட்டிருக்கும். மயிலாப்பூர் முற்காலத்தில் அநேக அன்னஸத்ரங்களை உடையதாக விருந்தது. இப்பொழுது அவைகளுள் காலத்தின் கொடுமையால் சிற்சிலதான் நடைபெற்று வருகின்றன. இவைகளில் சிலவற்றில் தர்சனத்திற்குவரும் பிராம்மணர்களுக்கும், மற்றவைகளில் சூத்திரர்களுக்கும், இதுபோல மற்றஜாதியார்களுக்கும் அன்று ஸமாராதனை நடந்துகொண்டேயிருக்கும். இவைகள் போதாவென்று வண்டிகளில் நீர்மோர் பானகம் தண்ணீர் வாழைப்பழம் வெள்ளரிக்காய் முதலியவைகளைப் போட்டுக்கொண்டு கோயிலை வலம் வந்து ஜனங்களுக்கு ஒருதிறத்தார் இவைகளைக் கொடுத்துக்கொண்டு வருவார்கள். சர்க்கரை தர்மம், சிறு புத்தக தர்மம் இவைபோன்ற அநேக சிறு சிறு தர்மங்கள் ஒவ்வொருவரும் ஆங்காங்கே தம்மால் இயன்றமட்டும் செய்வர். சிற்சில வீடுகளில் தண்ணீர் பந்தல்களும் வைக்கப்பட்டிருக்கும். தர்சனத்திற்கு வருபவர் எடுத்துவரும் சிறு குழந்தைகளுக்குச் சுத்தமான பசும்பால் தர்மம் ஓரிடத்தில் நடந்துகொண்டிருக்கும். இவ்வாறு அநேகவித ஷர்மங்க்ள் அங்கங்கே வீதி முழுவதும் ஓயாது அன்று நடந்துவரும். மேலும் மயிலாப்பூர் உள்ளேவந்து சேரும் அநேக பாதைகளில் ஸுமார் இரண்டுமூன்று மைல் தூரம் வரை அன்று தண்ணீர்ப்பந்தல்கள் காணப்படும். இவைகளை எல்லாம் உற்றுப்பார்த்து செய்பவர்கள் இன்னார் என்று தெரிந்து பத்திரிகையில் பிரசுரம் செய்தால் ஒருபக்கம் முழுவதும் வேண்டிவரும்போலத் தோற்றும்.

இத்தர்மங்களில் முக்கியமாக இரண்டு விஷயத்தை நாம் மறவாதிருக்கவேண்டும். இக்காலத்தில் ஸொத்திருப்பவர் தனித்தனியே தம்மனதிற்குத் திருப்தி வரும்படி தர்மம் செய்வது என்பது குறைந்துகொண்டே வருகிறது. இக்காலத்தவர் தர்மத்திற்காகப் பணத்தைக் கொடுத்துத் தர்மகர்த்தர்கள் ஏற்படுத்திவிட்டுத் தாம் தர்மம் செய்துவிட்டதாக இறுமாந்து, மற்றைய விஷயங்களில் தமது காலத்தைச் செலவிடுகின்றனர். இதனால் விளையும் தீங்கு பல. தர்மகர்த்தர்கள் குண விசேஷத்தால் தர்மத்திற்குவைத்திருக்கும் பணம் குறையலாம், அதை நடத்துவதற்கு ஏற்படுத்தப்படும் சிப்பந்திகள் அதை மேலும் குறைக்கலாம், முடிவில் யாரை உத்தேசித்து பணம் வைக்கப்பட்டதோ அவர்களுக்குப் படிக்குப் பாதிதான் வந்து எட்டும். இதுவே இக்காலத்து ஸமூக தர்மங்களின் கதி. தர்மம் செய்தல் என்பது நமது சாஸ்திரப்படி பணம் கொடுப்பதோடு நின்றுவிடவில்லை. தர்மமானது செய்பவனையும், பெறுபவனையும் ஏககாலத்தில் மேன்மைப்படுத்துமாயினும், உற்று நோக்கில் ஒழுங்குப்படி பலனை உத்தேசிக்காது ஆராதனையாக என்

ணிச் செய்யப்படும் தர்மம் செய்பவனையே அதிகமாக மேன்மைப்படுத்தும். ஆதலால் பணங்கொடுப்போன் அந்தத்தர்மத்தில்புகுந்து நடத்தவேண்டுவது முக்கியம். இம்மாதிரியாகப்பணங்கொடுப்போர் புகுந்து நடத்துவதை இந்த அறுபத்துமூவர் உத்ஸவங்களில் நடைபெறும் எல்லாதர்மங்களிலும்காணலாம். இரண்டாவது இக்காலத்துமஹான்கள் தாம்நன்கொடையாக ஓர் விஷயத்திற்குக்கொடுப்பது பத்திரிகைகள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டு வெளிவருமாகில் அதிகமாகக்கொடுப்பது வழக்கம். இவ்வாறு அநேகருக்கு இக்காலத்தில் பெயரும் பதவியும் வந்திருக்கின்றன. இம்மாதிரியான ஒருவித தாழ்ந்த கீர்த்தியையும் கருதாது ஒருவித கீர்த்தியும் வாராது என்பதை நன்றாகத் தெரிந்துக்கொண்டு சுத்த மனதுடன் இந்த அறுபத்து மூவரன்று ஸகல தர்மங்களும் நடத்தப்பெறுகின்றன. இதிலிருந்து எந்தத் தர்மம் செய்தபோதிலும் தனியாகப் பகவத் ஸம்பந்தம் இன்றிச் செய்யவேகூடாது, அவ்வாறு செய்தால் வீண்கர்வம் என்ற படுகுழியிலேயே மனிதனை அது வீழ்த்தும் என்பது விளங்கும். அந்தோ! இக்காலக்கொடுமையால் நடைபெறும் தர்மங்கள் யாவும் பலர் கூடி களம்பறிப்பதாகவும், பகவத்ஸம்பந்தம் அற்றதாகவும் இருக்கின்றனவே! இவைகளால் தர்மம் செய்வோருக்கும், தர்மகர்த்தர்களுக்கும், தர்மம் சென்று சேர்வோர்களுக்கும் வீண் கஷ்டம் மாத்திரமே ஒழிய பூர்ண பலன் ஒன்றும் கிடைப்பதாகக் காணோமே!

இவ்வளவு கோலாஹலமாக நடைபெறும் உத்ஸவத்தின் காரணமான கதையை உண்மையா அல்லவா என்று இக்காலத்தவர் அநேகர் சங்கிக்கலாம். இம்மாதிரி ஸந்தேகம் பகவத்பக்தர்கள் மனதில் வாராது. வரினும் அவர்தம் மனோநிலை குறையாது. தம்மை ஒருவாறு திருப்திப்படுத்திக்கொள்வர். அவர்கள் மனனத்தை இங்கு ஒருவாறு எடுத்துக் கூறுவோம். இக்காலத்தியப் பெரும்பாலாரும் இதைக்கவனித்துத் திருப்தியாக இருப்பின் ஸமாதானம் அடையலாம்.

உட்கருத்தை ஒட்டி நோக்கில் எல்லா அற்புத கதைகளும் உண்மைதான் என்பதற்கு ஸந்தேகமில்லை. வெளிப்படையாக உள்ள விஷயங்களை ஒட்டிநோக்கினும் அவைகளுக்கும் ஓர் சிறந்த சக்தி உண்டு. இந்த விஷயமாக ரேனன் என்ற குணதோஷ நிரூபகர் பின்வருமாறு கூறுகிறார். 'அஸாத்ய காரியங்களே பக்தியை உண்டாக்கி நிலைபெறச் செய்பவை. இவைகளைவிடச் சற்றுத் தாழ்ந்த விஷயங்கள் பக்தர்களுக்குத் திருப்தியை உண்டாக்கமாட்டா.'' இன்றைக்கும் நாளைக்கும் திரௌபதி ஐந்து கணவரை உடையவளாயினும் பதிவிரதைதான் என்று ஸ்திரப்படுத்த சில ஹிந்துக்கள் தீமிதிக்கின்றனர். இதுவும் அல்லாமல் "நேரான உண்மையைவிட கட்டுக்கதையை போலவிருக்குங்கதை இவ்வாறு சிறந்த உண்மையாக இருக்கும்; இவ்வாறு அற்புதக்கதைகள் அவை குறிப்பிக்கும் கதாநாயகன் மஹிமையாலேயே உண்டாவன; அவன் இல்லாவிடில் இத்தகைய அற்புத விஷயங்களை ஒருவராலும் சிருஷ்டிக்கவே முடியாது; அவனுடைய மஹிமைதான் அவனுடன் ஸம்பந்தப்படும் ஒவ்வொருவரையும் இவ்வாறு மேன்மைப்படுத்துவது என்ற விஷயங்களை உணர்ந்தால் தான் ஸம்பந்தஸ்வாமிகள் அற்புதச் செயல்களைக் கண்டு, வீண்சங்கை செய்து கெட்டுப் போகாது, மூடநம்பிக்கையால் அறியாமையிலும் அழுந்தாது, மனசுத்தத்தோடு அவைகளைக்கண்டு வியந்து எளிதில் பரமபதம் அடைவதிலேயே எவனுக்கும் கண்ணு இருக்க முடியும். மேலும்இவ்விஷயமாகப்பின்வரும் அற்புதவாக்கியத்தையும் நாம் மறவாதிருக்கவேண்டும். "உண்மையான பக்தியின் சிறப்பு இன்னது என்பதே நமக்குத்தெரியாது. நாம் இப்பொழுதிருக்கும் ஸாதாரண நிலையிலிருந்து நோக்கினால், பக்தியின் வீர்யம், செழிப்பு, அபாரசக்தி ஆகிய இவைகள் நமக்கு நன்றாய் விளங்கமாட்டா. பக்திதான் மலையைத் தூக்குவதும், அலக்ஷ்யமாய்ப் பெரிய சமுத்திரங்களைத் தாண்டுவதும், பஞ்சபூதங்களை அழிப்பதும், பிரபஞ்சத்தையே அசைப்பதும் ஆகிய அற்புதச் செயல்களுக்குக் காரணமாக இருக்கும். பக்தியால் ஆகாததொன்றில்லை. பக்தியால் ஒருவன் தொழில் செய்யுங்காலத்தில், அவன் ஆத்மசக்தியே வெளிவருதலால், நடக்கும் தொழில் மிக அற்புதமாகத்தான் இருக்கும்.''

"எல்லா மவன்செயலே யென்றிருக்கும் வல்லாற்
கில்லை காணாத திறையே பராபரமே."

# பைத்தியக்காரத் தையற்காரன்

## THE MAD TAILOR

அநேக வருஷங்களுக்குமுன் அலக்ஸாண்டிரியா (Alexandria) என்னும் பட்டணத்தில் ஹேபிபுல்லா (Habibulla) என்னும் தையற்காரனொருவனிருந்தான். அவன் தையல் வேலையில் மிகவும் கெட்டிக்காரன். அவன் நடை உடைபாவனைகள் மட்டும் கொஞ்சம் விசித்திரமாயிருந்தன. சில சமயங்களில் அவன் மிக்க சுறுசுறுப்பாயிருந்தபோதிலும் வேறு சில சமயங்களில் ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து ஒரேபக்கத்தைப்பார்த்து வெகுநேரம் உட்கார்ந்திருப்பான்.

ஹேபிபுல்லா மகமதியனாகையால் வெள்ளிக்கிழமைகள்தோறும் பள்ளிவாசலுக்கு நல்ல உடை உடுத்துக்கொண்டு போவதுண்டு. போகுங்காலும் திரும்புங்காலும் யாராவது அவனை க்ஷேம ஸமாசாரம் விசாரித்தால் வாயைத்திறந்து ஒன்றுஞ் சொல்லாமலே கையை அசைத்துவிட்டும், கண் ஜாடைகள் செய்துவிட்டும் பிறர்களை மதியாதவன்போல் போய்விடுவான். அவனை வேலைக்காக அமர்த்தியிருந்த எஜமானன் அவனைப்பார்த்து அவன் இராஜகுமாரனாக இருக்கவேண்டுமென்று பரிகாசஞ் செய்வதுண்டு. ஹேபிபுல்லா அதை நிஜமென்று நம்பி தானும் அவ்வாறே அநேகந்தடவைகளில் எண்ணினதாகச்சொல்லுவான். அவன் நல்ல வேலைக்காரனாக இல்லாவிடில் அவனை அவன் எஜமானன் துரத்தியிருப்பான்.

ஒரு நாள் எகிப்த் (Egypt) தேசத்து ஸுல்தான் ஒரு சிறந்த பட்டாடையைச் செய்ய ஹேபிபுல்லா எஜமானனுக்கு உத்திரவு அனுப்பினான். ஹேபிபுல்லா மிகவும் மேலான வேலைக்காரனாகையால் அவ்வுடையைச்செய்ய அவன் எஜமானன் அவனுக்குக் கட்டளையிட்டான். சிலதினங்களுக்குள் ஹேபிபுல்லா அதை முடித்துவிட்டு ஒருவருமில்லாத சமயம் பார்த்து அவ்வுடையைத் தான் போட்டுக்கொண்டு கண்ணாடியில் முகத்தைப்பார்க்க தான் மிகவும் அழகுள்ளவனென்றும் தான் இராஜகுமாரனாக இருப்பது தகுதிதானென்றும் நினைத்தான். இதே எண்ணம் அவன் மனதில் குடிகொண்டதினால் இரவில் அவன் தூங்கவேயில்லை. பொழுது விடிவதற்குள் அவ்வுடையை மேலே போட்டுக்கொண்டு கையிலிருந்த கொஞ்சம் பணத்தையும் எடுத்துக்கொண்டு ஊர்ப்பிரயாணம் போவதென்று புறப்பட்டுவிட்டான். கொஞ்சதூரம் அலைந்ததும், ஒரு இராஜகுமாரன் கால்நடையாகப் போவது, கௌரவத்திற்குச் சரியல்ல என்று நினைத்து கையிலிருந்த பணத்திற்கு ஒரு கிழக்குதிரையொன்று வாங்கி அதின்மேல் ஏறிச் சவாரி செய்துகொண்டு போகையில் இவனைப்போல் வேறொரு வாலிபன் குதிரையேறி வருவதைக் கண்ணுற்றான்.

இருவரும் சமீபித்துவரவே, ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் விருத்தாந்தங்களை விசாரிக்க ஆரம்பித்தார்கள். ஹேபிபுல்லா தன் விருத்தாந்தத்தைமட்டும் சரிவரச் சொல்லவில்லை. அவனுடன்கூட வந்த வாலிபன் தன் பெயர் ஸெலீம் என்றும் தான் குழந்தைப்பருவம் முதல், தன் மாமனாகிய எகிப்து பாச்சா வீட்டில் வசித்துவந்ததாகவும் தன் தகப்பனார் தாயார் யாரென்று தனக்குத் தெரியாதென்றும், தான் தன் மாமனிறக்கையில் அளித்த உத்திரவை கீழ்ப்படிந்து நடப்பதற்காக அவ்வழியாய்ப் போவதாகவும் சொன்னான். ஹேபிபுல்லா அவ்வுத்திரவு என்னவென்று கேட்க ஸெலீம் தான் ஒரு பெரிய ஸுல்தானின் குமாரனென்றும் தன் தகப்பனார் சில ஜோஸ்யர்கள் பேச்சைக்கேட்டுத் தன்னை இருபத்தோராவது வயதுவரையில் மாமன் வீட்டிலேயேயிருக்கும்படி யனுப்பினதாகவும் தனக்கு நான்கு தினங்களில் இருபத்தோராவது வயது முடிவதால் தன் தகப்பனாரிடம் போவதாகவும் கொஞ்சதூரம் சென்றால் ஒரு பெரிய மலையடிவாரத்தில் அநேகம் ஜனங்களிருப்பார்களென்றும் தன் வசம் தன் மாமன் கொடுத்த சிறு கத்தியை அவர்களிடம் காட்டினால் அவர்கள் அவனைத் தெரிந்துகொண்டு ஊருக்கு அழைத்துச் செல்வார்களென்றும் தன் மாமன் இறக்கையில் தன்னிடம் சொல்லியிருக்கிறானென்றும் சொல்ல அதையெல்லாம் மிக்க கவனத்துடன் ஹேபிபுல்லாகேட்டான். உடனே அவனுக்கு ஸெலீம் பேரில் பொறாமையும் தான் இராஜகுமாரனாக ஏனிருக்கக்கூடாதென்ற ஆவலும் ஏற்பட்டது.

இருவரும் கொஞ்சதூரஞ்சென்று ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். ஸெலீம் களைப்பாயிருந்ததினால் படுத்தவுடனே அயர்ந்து நித்திரைபோனான். ஹேபிபுல்லாவுக்குத் தூக்கம் வரவேயில்லை. ஸெலீமை

அவன் வசமிருந்த கத்தியைக்கொண்டு கொன்றுவிட்டுக் குதிரையேறிச் செல்லலாமா வென்று யோசித்துக் கத்தியை மெள்ள எடுத்து ஸெலீமைக் கொல்ல எண்ணினான். உடனே மனதில் அருவருப்புண்டாகி அவ்வளவு கெட்டகாரியத்தைச் செய்வது தகுதியல்லவென்று எண்ணி கத்தியைத் தன்னிடுப்பில் கட்டி ஸெலீம் குதிரையின்மேலேறி கடுவேகமாய்ச் சென்றான்.

பொழுது விடிந்ததும் ஸெலீம் தன் கத்தியையும் குதிரையையும் காணாமல் மனந்தளர்ந்து இன்னது செய்வதென்று தோன்றாமல் சற்றுநேரம் பிரமித்துப் பின்பு சற்றுத்தேறி ஹேபிபுல்லாவின் கிழக்குதிரையின் மீதேறிக் கடுவேகமாக குதிரையை முடுக்கி மலையடிவாரத்தை நோக்கிச்சென்றான். இவன் போவதற்குள்ளாகவே ஹேபிபுல்லா வெகு வேகமாய்ப் போய்ச்சேர்ந்தான். மலையடிவாரத்தில் அநேகக்கூடாரங்களையும் குதிரைகளையும் ஒட்டகங்களையுங் கண்ணுற்றான். மார்பு படபடவென்று அடித்தது. தான் ஸெலீமுக்குச்செய்த துரோகத்தை எண்ணினான். திரும்பிப்போகலாமென்று கருதினான். எடுத்தகாரியத்தை முடிக்காமல் நடுவில் விட்டுவிடுவது பிசகென்றும் தான் இராஜகுமாரனாகலாமென்ற அவாவினாலும் ஒருவாறு மனந்தேறினான். குறிப்பிட்ட தினத்திற்கு முந்தினதினமே மலையடிவாரத்திற்குச் சமீபத்துச் சென்றதினால் கூடாரங்களின் சமீபமாகப் போவது சரியல்லவென்று எண்ணி தூரத்திலேயே குதிரையை ஒருமரத்தில்கட்டி, ‘தன்னிடமிருந்த உணவை உண்டு அன்றிரவு தங்கியிருந்தான்.

பொழுதுவிடிந்ததும் எழுந்து குதிரையேறி வேகமாக அம்மலையடிவாரத்திற்குச் சென்று அவ்விடமிருந்த மனிதர்களின் உடைமுதலியவைகளால் சுல்தான் யார் என்று ஊகித்தறிந்து, தன்னிடமிருந்த கத்தியைக் காட்ட சுல்தான் உள்ளமகிழ்ந்து மகனைக் கண்ட சந்தோஷத்தினால் ஆநந்தசாகரத்தில் மூழ்கி அவனை மார்போடணைத்துத் தன்னுடனிருந்த பிரபுக்களுக்கெல்லாம் தன் குமாரனைக்காட்டி எல்லாரும் ஆயத்தர்களாய் குதிரைகளின் மேலும் ஒட்டகங்களின்பேரிலும் ஏறி பேரிகைமுழங்க சகலவாத்தியங்களும் கோஷிக்கப் புறப்படுகிற சமயம். பின்னால் சற்றுப்பொறுங்கள், சற்றுப்பொறுங்கள் என்று கதறிக்கொண்டு முகம் வெயர்க்க பெருமூச்செறிந்துகொண்டு கிழக்குதிரையின்மீது ஸெலீம் வந்து சேர்ந்தான். இதென்ன அற்புதமென்று சுல்தான் மலைத்தான். ஹேபிபுல்லா மனம், என்னாகுமோ வென்ற பயத்தால், பதைத்தது. ஸெலீம், ‘அவனை இராஜகுமாரனென்று எண்ணி மோசம்போகாதீர்கள். அவன் மோசக்காரன்’என்று சொன்னான். ஹேபிபுல்லா ‘மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, “என் பிதாவே! அவன் பைத்தியம் பிடித்தவன். அவனை வழியில்கண்டேன். அவன் ஹேபிபுல்லா என்ற தையற்காரனும்” என்று சொல்ல சுல்தான் நம்பி ஸெலீமை ஒரு ஒட்டகத்தின்மீது பின்கட்டு முறையாகக் கட்ட உத்திரவளித்து யாவருடனும் ஊர் புறப்பட்டான்.

இராஜகுமாரன் இருபத்தொரு வருஷங்களுக் கப்பால் வருகிறானென்ற ஆவலால் நகரத்து ஜனங்களெல்லாம் சந்தோஷப்பட்டு வீடுகளை யெல்லாம் அலங்கரித்துத் தோரணங்கள் கட்டி ஊர்கோலம் போகையில், “ஸெலீம் நீடூழி வாழ்க” என்று ஆரவாரித்து அரண்மனையை நோக்கிச் சென்றார்கள். அரண்மனையிலோ சுல்தானின் மனைவி பெரிய ஹால்களை யெல்லாம் இந்திரசபைபோற் செய்து புத்திரன் வரவை யெதிர்பார்த்திருந்தாள். சுல்தான் புத்திரனை அழைத்துச் சென்ற இராணியிடத்தில் போக அவன் அவளை நமஸ்கரித்தான். தாயாகையால் அவனைப் பார்த்ததும் முகக்குறிகள் சிலவற்றால் அவன் தன் புத்திரனல்லவென்று அவளுக்கு மனதிற்பட்டது. அவள் ‘இவன் என் புத்திரனல்ல, இவன் என் புத்திரனல்ல’ என்று கூவினாள்.

சுல்தான் மீசை பதைக்க இராணியைக் கடிந்த முகத்துடன் பார்க்க இதற்குள் வெளியில் கட்டுண்டிருந்த ஸெலீம் மனம் கொதித்துக் கயிறுகளையெல்லாமறுத்து காவற்காரர்களை மீறி உள்ளேசென்று இராணியைப் பார்த்து, “அம்மா, அவன் மோசக்காரன். என்னைமோசஞ்செய்துவிட்டுப் புத்திரனென்று சொல்லித் தங்களிடம் வந்துவிட்டான்” என்று சொல்ல, இராணி, அவன் முகத்தை நன்கு உற்றுப் பார்த்து அவன்தான் தன் புத்திரனென்று மனந்தெளிவுபட்டு, “இவன்தான் என் புத்திரனென்று சொன்னாள்.” ஹேபிபுல்லா அவன் பைத்தியக்காரன் என்று சொல்ல, சுல்தான் சேவகர்களைப் பார்த்து “அவனைக்கட்டுங்கள் அவள் பேச்சைக் கேட்கவேண்டாம். அவள் பெண்பிள்ளைதானே,

என்று சொல்ல, சேவகர்களும் உடனே ஸெலீமைக் கட்டிக்கொண்டுபோய் ஒரு அறையிலடைத்துவைத்தார்கள். அன்று பொழுதுஞ் சென்றது. இரவு முழுவதும் இராணிக்கு நித்திரை வரவே இல்லை.

தன் புத்திரனல்லவென்று மனதிற்கு நன்றாய்த் தெரிந்தபோதிலும் தன் கணவன் மனதை எப்படித் திருப்புவதென்று பலவாறு சிந்தித்தாள். மலைவாரத்திற்குச் சென்றவர்களை வரவழைத்து அவ்விடம் நடந்த விஷயங்களையெல்லாங் கேட்டாள். தன்குமாரனென்று வந்திருப்பவன்தான் தையற்காரனாக இருக்கலாமென்று தன்புத்தியிற் றோன்றிற்று. கடைசியில் அவளுக்கோருபாயம் மனதிற்பட்டது. மறுநாள் காலையில் தன் கணவனிடஞ் சென்று "வணங்கி, என் பிசகை மன்னிக்கவேண்டும். நான் தங்களை ஒருவரங் கேட்டுக் கொள்கிறேன், அதை எனக்குத் தரவேண்டும்," என்று சொல்லவே சுல்தானும் மனமிளகி, "நான் உன்னைக் கோபித்துக்கொண்டேன். ஆயினும் என்னவரங் கேட்டபோதிலும் தருகிறேன்" என்று உத்தரமளித்தான். அவள், "ஹேபிபுல்லா, ஸெலிம் ஆகிய இருவருக்கும் பட்டுநூல் ஊசி முதலியவற்றை வாங்கிக்கொடுப்போம். அவர்களை இரண்டு தினங்களில் ஒருபட்டாடையை நெய்யும்படி செய்வோம்" என்றாள். சுல்தான், "எனக்கு ஒன்றும் ஆக்ஷேபணையில்லை. அந்தப் பைத்தியக்காரன் எவ்வளவு நன்றாக பட்டாடையை நெய்தபோதிலும் அவனை என் புத்திரனென்று ஒப்புக்கொள்ளவே மாட்டேன்" என்று சொல்லி இரண்டு அறைகளைச் சித்தப்படுத்தி வேண்டிய கருவிகளையும் கொடுத்து ஹேபிபுல்லா, ஸெலீம் ஆகிய இருவரையும் வரவழைத்து இரண்டு தினங்களில் ஒரு பட்டாடையை நெய்ய உத்திரவளித்தான்.

ஹேபிபுல்லா அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. தான் ஒரு மேலான பட்டாடையை நெய்து இராணி மனங்களிக்கச் செய்துவிட்டாற் போதுமென்று உள்ளம் பூரித்தான். இருவரும் உடனே தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்று வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். ஸெலீம் துக்கக்கடலிலாழ்ந்தான். மூன்றுநாள் சுல்தானும் இராணியும் இருவரையும் வரவழைத்து அவர்கள் வேலையைப் பரிசோதிக்கையில் ஹேபிபுல்லா உயர்ந்த பட்டாடையைக் காட்ட, ஸெலீம் ஒன்றுஞ் செய்யத் தெரியாதவனாகையால் நூல், ஊசி, முதலிய சாமான்களைக் கீழே யெறிந்து வெகு கோபத்துடன் "நான் இராஜகுமாரன். எனக்கு வில்வித்தை குதிரையேற்றம் சண்டைபோடுதல் இவைகளைக்கற்றுக் கொடுத்தார்களேயொழிய கீழ்மகன்செய்யுந் தையல் வேலையை ஒருவருங் கற்றுக்கொடுக்கவில்லை" என்றான். இராணிக்கு இப்பொழுது தன்புத்திரனின்னானென்று வெளிப்பட்டது. சுல்தானைப் பார்த்து, "ஐயா, நம் புத்திரனுக்குத் தையல்வேலை யார் கற்றுக் கொடுத்தவர்கள்? இவன்தான் நம்புத்திரன் சந்தேகமே இல்லை" என்றுரைத்தாள். சுல்தானுக்கும் மனம் இப்பொழுது சற்றுக் கலங்கினது. நன்றாய்நெய்த ஹேபிபுல்லா தன் புத்திரனல்லவென்றும் தன் புத்திரனை மோசஞ்செய்துவிட்டு வந்திருக்கிறானென்றும் அவன் தீர்மானித்தான்.

இருந்தபோதிலும் வேறு ஒரு உபாயத்தாலும் உண்மை கண்டுபிடிக்கவேண்டுமென்று எண்ணினான். பலவாறு சிந்தித்தான். மந்திரி பிரபுக்கள் யாவருடனுங் கலந்து யோசித்தான். பக்தியுள்ள மகம்மதியனாகையால் அல்லாவைப் பிரார்த்தித்தான். தன் குலகுருவை வரவழைத்துக் கேட்டான். அவர் மகா புத்திமான். அவர் வீடுபோய் சிறிதாய் இரண்டு பெட்டிகள் செய்தார். ஒரு பெட்டியின்மேல் 'ஐசுவர்யமும், சந்தோஷமும்' என்றும், மற்றொரு பெட்டியில் 'கீர்த்தியும் கௌரவமும்' என்றுஎழுதிப் பெட்டிக்குள் சில சாமான்களை வைத்துப் பெட்டிகளை மூடி அரண்மனைசென்று சுல்தானிடத்தில் அவைகளைக் கொடுத்து இதில் சரியான பெட்டியைத் தனக்கு வேண்டுமென்று எடுத்துக்கொள்பவன் உன் குமாரன் என்று சொன்னார். சுல்தான் பெட்டியைத் திறக்கவேயில்லை.

மறுநாள் சபை கூடினது. இரு பெட்டிகளையும் சபை நடுவில் வைத்து ஹேபிபுல்லாவை முதலில் வரவழைத்து இருபெட்டிகளிலொன்றை யெடுத்துக்கொள்ள உத்திரவு கொடுக்க அவன் கொஞ்சம் யோசித்து, தனக்கு வேண்டியது ஐசுவரியந்தானென்று சொல்லி 'ஐசுவரியமும், சந்தோஷமும்' என்று எழுதியிருந்த பெட்டியை எடுத்தான். உடனே அப்படியே அதை அவ்விடத்திலேயே வைக்கச்செய்து ஸெலீமைக் கூப்பிட்டு இரு பெட்டிகளிலொன்றை எடுக்கச்செய்ய ஸெலீம் பலகால் சிந்தித்து, "கனவான்களே செல்வம் எப்பொழுதும் செல்வோமென்று சொல்லிக்கொண்டே யிருக்

கிறது. செல்வம் சந்தோஷம் நிலையற்றவை. நிலைத்திருப்பது கீர்த்தியும் புகழுமே. ஆகையால் நான் இப்பெட்டியை எடுக்கிறேன்" என்று சொல்லி "கௌரவமும், கீர்த்தியும்" என்று எழுதப்பட்டிருந்த பெட்டியை எடுத்தான். உடனே இருவர்களையும் அவரவர்களெடுத்த பெட்டியைத் திறக்கும்படி சொல்ல, அவர்கள் திறந்தார்கள். ஸலீம் எடுத்த பெட்டியில் தங்கத்தினால் ஒரு சிறிய கிரீடமும் இராஜனுக்குரிய கத்தியும் இருந்தன. ஹேபிபுல்லா எடுத்த பெட்டியிலோ நல்ல ஊசியும் பட்டுநூலும் வைத்திருந்தன. சுல்தானுண்மையை யறிந்துகொண்டான்.

ஹேபிபுல்லாவுக்குப் புத்திவந்து தான்செய்த பிசகையெல்லா மொப்புக்கொண்டான். அவன் சுல்தான் ஸலீம் இவர்கள் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். தான் செய்தது குற்றம் குற்றமென்று ஒப்புக்கொண்டான். ஸலீம் கம்பீர குணமுள்ளவனாகையால் தன் பிதாவிடம் அவனை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு அவனை ஊருக்கு அனுப்பினான். அலெக்ஸாண்டிரியா போய்ச்சேர்ந்து தான் திருடிவந்த உடுப்பையும் அதற்கு அபராதமாக இரண்டு பங்கு பணமும் கொடுத்துவிட்டுத் தன் தையல்வேலையிலமர்ந்து வெகுகாலம் வாழ்ந்தான். ஸலீம் தன் உண்மைப் பதவியை யடைந்து சுல்தானுக்கும் இராணிக்கும் தன் மாமன்வீட்டில் நடந்த விஷயங்களையெல்லாஞ் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு சுல்தானிறக்கவே தான் சிம்மாசனமேறிப் பிரஜைகளுக்கெல்லாம் ஹிம்சையில்லாமல் நீடூழிகாலம் அரசாண்டான். இக்கதையால் உண்மையே சிறந்தது என்பது நன்கு விளங்குகிறது.

"மேலிருந்து மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்,
கீழல்லார் கீழல் லவர்"

"இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு"

ஜி. ஸுந்தரேசய்யர், பி.ஏ., எல்.டி.

---

மிதந்துக்கு மிஞ்சின உழைப்பு.—ஏதோ இவ்வித உழைப்பு நமக்கு அதிகலாபத்தைக்கொடுக்கும் என்று ஜனங்கள் ஒருவித தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். குடுமியில் கயிறுகட்டி அதை விட்டத்தில்மாட்டி தூங்கும் பொழுது அக்கயிறு தொங்கும் நமது தலையை யிழுப்பதால் விழித்துக்கொண்டு அவ்வளவு அதிகமாய்ப் படித்து சிலர் பெரிய பரீட்சைகள் கொடுத்து உயர்ந்த பதவியிலிருப்பதாகப் பலர் கட்டுக்கதைகள் சொல்லுவார்கள். இவைகள் கவைக்குதவா பேச்சுகள்.

# குமார ஸம்பவம்

## BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

(முன் தொடர்ச்சி.)

77. ஒன்றுமில்லாதவராயிருந்துகொண்டு அவர் எல்லாவித ஸம்பத்துக்களுக்குமிருப்பிடமாய் விளங்குகின்றார். அவர் மயானத்தில் வஸித்துக்கொண்டே மூவ்வுலகங்களுக்கும் நாதனாய் விளங்குகின்றார். அவர் பயங்கரமான உருவங்கொண்டவர் என்றாலும் அவர் பெயர் அழகானவர் (சிவன்) அன்றோ. இதுவரையில் சிவபெருமானை உண்மையாக ஆராய்ந்தறிந்தவர்கள் ஒருவருமில்லை யன்றோ!

78. ஒரு சமயத்தில் அவர் தனது மேனியை நகைகளால் சிங்காரித்துக்கொண்டிருப்பார். மற்றொரு சமயத்தில் பாம்புகளையே அணிந்து விளங்குவார். ஒருசமயத்தில் அவர் யானைத்தோல் உரித்து உடுத்திருப்பார். மற்றொரு சமயத்தில் வெண்பட்டு உடுத்திருப்பார். தன் தலைமேல் ஒருபொழுது மண்டை ஓட்டைக்கவிழ்த்துக்கொண்டிருப்பார். மற்றொருபொழுது சந்திரனையே அணிந்திருப்பார். எண்ணுருவங்கொண்டு விளங்கும் ஜகதீசனுடைய உடலை அறிந்தவர்களுமுண்டோ!

79. சுடலைச்சாம்பல் அவர்மேனியில் பட்டமாத்திரத்தில் மற்றவர்களைப் பரிசுத்தம்பண்ணும் மேற்பதவியை அடைகின்றதன்றோ. அதே சாம்பற்பூசி அம்பலத்தாடி தாண்டவம் செய்யும்பொழுது அவர் மார்பினின்று உதிரும் சுடலைச்சாம்பலைத் தலைப்பில் எந்திக்கொள்ள தேவர்கள் காத்து நிற்கின்றார்களன்றோ!

80. ஒன்றுமில்லாத அச்சிவபெருமான் எருதின் மீதேறிச் செல்லும்பொழுதுதான் மதம் பெருகும் திசைகளில் எறிவரும் இந்திரன் அவர் பாதங்களைத் தனது தலையால் வணங்கித் தான் தலையிலணிந்த நன்றாக மலர்ந்திருக்கு மந்தாரை மலர்களின் பூந்தாதுகளால் அவருடைய கால்விரலை அலங்காரம் பண்ணுகின்றான்.

81. கெட்டுப் போன நீ சிவபெருமானிடம் தோஷங்கள் இவை என்று எடுத்துச் சொல்லும்பொழுது ஒன்றை மட்டும் உண்மையாகச் சொன்னாய். தனக்குத்தானாய்த் தோன்றிய பிரமதேவருக்கும் காரணமாய் சிவபெருமானை மாமுனிவர்கள் குறிக்கும்பொழுது அவருடைய காரணத்தைக் கண்டறிய எவரால் முடியும்.

82. உன்னுடன் விவாதம் செய்வதில் என்ன பிரயோஜனம். உனக்கு முற்றிலும் நீ கேட்டபடியே சிவபெருமானிருக்கட்டும். நானே சிவபெருமானிடம் என்னுசையை முற்றிலும்வைத்துவிட்டேன். தனது மனத்தின் போக்குப்படி நடக்கின்றவர்களை உலக நிந்தை ஒன்றும்பண்ண முடியாதன்றோ.

83. அடிதோழி இவனை இங்குவிட்டு அப்புறப் படுத்து. இவன் உதடு அசக்குகின்றதைப் பார்த்தால் இவன் மறுபடி ஏதோ பேச எத்தனிக்கின்றவன் போல் காண்கின்றான். பெரியவர்களை நிந்தித்துப் பேசுகின்றவன் மட்டும் பாவியல்ல. அவன் செய்யும் நிந்தையைக் கேட்கின்றவர்களும் பாவிகளாகின்றார்கள்.

84. அல்லது நாமே இவ்விடம்விட்டு வேறிடம் போவோம் " என்று சொல்லிக்கொண்டு அச்சிறுமி வேகத்தால் தான் தனது குசங்களின் மேல் மூடியிருந்த மூர்தணிபாக்க அவ்விடம் விட்டு நடக்கலானுள். இடபக்கொடியோனும் தனது நிஜ உருவங்கொண்டு புன்சிரிப்புடன் அவளைப் பற்றிப் பிடித்துக் கொண்டான்.

85. சிவபெருமானைக் கண்டதும் மெய்பதற, தேகமெல்லாம் வியர்வை ஓட, வெட்கந் தோன்ற அப்பார்வதிதான் பிரயாணத்துக்காக முன்னெடுத்த காலை அப்படியே நிறுத்தினவளாய் வெகு வேகமாக ஓடிவரும் வெள்ளம் நடுவில் பெரும் மலை ஒங்கி நிற்கக் கண்டதும், முன்னும் போக முடியாமல் பின்னும் போகமுடியாமல் குழம்பி நிற்பது போல மனம் பதறிநின்றுள்.

86. "பார்வதி, இன்று முதல் நான் உனது அடிமையாய் விட்டேன். உனது தவத்தால் நீ என்னை விலைக்கு வாங்கிவிட்டாய்" என்று சந்திரசேகரன் சொல்லவே பார்வதி ஒரு பெருமூச்செறிந்து அன்று வரையில் தான் தவத்தால் பட்டிருந்த சிரமத்தை அத்துடன் தன்னைவிட்டு அகற்றினுள். நாம்பட்ட சிரமத்துக்குத் தக்கபயன் நமக்குக் கிடைத்துவிட்டால் அந்தச் சிரமம் சிரமமாக அதன் பிறகு தோன்றவே தோன்றுதல்லவா.

உமையை வரித்தல் என்ற 6-வது சருக்கம்

அவ்வாறு தேவதேவன் தம்மிடம் அருள் புரிந்த பின்பு பார்வதியும் இரகசியமாய் தனது தோழியிடம் சிவபெருமானுக்கு ஒருசமாசாரம் சொல்லியனுப்பினுள். அது யாது எனில் தம்மைத் தமது தந்தையாகிய ஹிமவான் சிவபெருமானுக்குக் கன்னிகாதானம் செய்துகொடுக்கும்படி உத்தரவாகவேண்டும் என்பதேயாம்.

2. அவ்வண்ணம் தமது தோழி மூலமாய் சிவபெருமானுக்குச் சமாசாரம் சொல்லியனுப்பின பின்னர் அப்பார்வதி அவரிடம் மாறுத அன்புடன் துடிக்கின்றவளானுள். வசந்தகாலத்தில் எப்பொழுதும் குதூகலத்துடன் விளங்கும் கட்டி மாங்கிளை குயில் தன்னிடம் வந்து உட்காரக் காண்பதை எதிர்பார்த்துக்கொண்டு தவித்து நிற்குமன்றோ!

3. மன்மதனையே தீயிட்டு எரித்த அச்சிவபெருமானும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு நீராதபக்ஷமாக உமையிடம் விடைபெற்று அவ்விடம் விட்டு நீங்கி சோதி உருவாய் விளங்கும், அங்கிரஸர் முதலான எழு ரிஷிகளையும் தம் மனத்தால் கருதலானுர்.

4. தவத்தையே தங்கள் பொருளாகக்கொண்ட அம்மா முனிவர்கள் தங்கள் தேக ஒளியின் சமூகத்தால் ஆகாயத்தையே விளங்கச்செய்துகொண்டு அருந்ததியுடன் கூட உடனே ஈசனுர் முன்பாக வந்து தோன்றினுர்கள்.

5. (முனிவர்களுடைய சிறப்பு): கரையில் ஓங்கி நிற்கும் மந்தாரமரத்தின் மலர் உதிரப்பெற்ற அலைகள் அம்மலர்களையே வாரி வீச திசைக்கரிகளின் மதமணம் பரிமளிக்க விளங்காநிற்கும் ஆகாயகங்கையின் ஜலத்தால் ஸ்நானம் செய்தவர்களாய்,

6. நல் முத்தாலாகிய பூணுல் அணிந்து பொன் மாலை பூண்டு ரத்தினகற்களால் கோர்க்கப்பட்ட ஜபமாலை கைப்பற்றித் துறவறம் சேர்ந்த கற்பக தருக்கள்போல் விளங்குகின்றவர்களாய்,

7. தாம் சூரியமண்டலத்துக்கு மேலே ஸஞ்சரிக்கின்றவர்களாகையால் தங்களிருப்பிடத்துக்குக் கீழாகத் தமது குதிரைகளை ஓட்டிச் செல்லும் சூரிய பகவானுல் தம் ரதத்தின்கொடியைத் தாழச்செய்து நமஸ்காரத்துடன் கண்களை மேலெடுத்துப் பார்க்கிறவர்களாய்,

8. மகாவிஷ்ணுவின் மகா வராக அவதாரத்தின் கொம்புப்பல்லைத் தமது கையால் பற்றச்செய்து ஆதாவுடன் தூக்கி எடுக்கப்பட்ட பூமாதுடன் பிரளய காலத்திலும் அழிவின்றிச் சுகமாய் இளைப்பாறுகின்றவர்களாய்,

9. பிரம்மதேவருக்கு அடுத்தபதவியில் அவர் படைத்து நிறுத்தியதின் மேல் இன்னும் மிகுந்திருந்த படைப்புகளைப் படைத்த காரணத்தால் பெரியோர்களால் பழைய பிரும்மதேவர்கள் என்று புகழப்படுகின்றவர்களாய்,

10. முற்பவத்தில் நிர்மலமான தவத்தின் அருளடைந்து அத்தவத்தின் பயனை முனிவர்களாயிருந்த போதிலும் இச்சென்மத்திலும் அனுபவிக்கின்றவர்களாய் விளங்கிய அம்மாமுனிவர்கள் எழுபெயர்களும் அங்கு வந்துதோன்றினார்கள்.

11. அவர்கள் நடுவில் தமது கணவன் பாதங்களில் கண்வைத்தவளாய் மகாபதிவிரதையாய் தவத்தின் பயனே உருவெடுத்து வந்தாற்போல சோபிக்கின்றவளாய் அருந்ததி தேவி வெகு அழகாய் விளங்கலானாள்.

12. ஈசனார் அம்மாது சிரோமணியையும் அம்மாமுனிவர்களையும் ஏற்றத்தாழ்வின்றி ஒரேவிதமாய் உபசரிக்கலானார். பெரியோர்கள், ஸ்திரீ புருஷன் என்ற வித்தியாஸத்தை ஒருபொழுதும் கவனியார்கள். நல்லொழுக்கம் ஒன்றன்றோ அவர்கள் எப்பொழுதும் கொண்டாடிப் புகழும் குணம்.

13. அருந்ததியைக் கண்டபிறகு ஈசனாருக்குத் தாமும் மனையாட்டியை வெகு சீக்கிரம் அடைய வேண்டும் என்ற ஆவல் தோன்றிற்று. யாகம் முதலிய இல்லற சடங்குகளுக்கு மனைவியன்றோ முதற் காரணம்.

14. இல்லறத்தின் பொருட்டு ஈசனார் பார்வதியைத் தமது மனத்தில் நினைத்ததும், முதற் குற்றத்தை நினைத்து நடுங்கி நின்ற மன்மதனுடைய பிராணனும் மறுபடியும் மூச்சுக்காற்றுளது போலாயிற்று.

15. அம்மாமுனிவர்கள் எல்லோரும் ஈசனாரை வணங்கிய பின்னர் ஜகத்குருவாகிய அக்கடவுளைப் பார்த்து வேத மொழுகும் தங்கள் வாய்களால் அன்பு நிரம்பிய தங்கள் மேனி மயிர்க்கூச்செறிய பின்வருமாறு சொல்லலானார்கள்.

16. நாங்கள் நியம பூர்வகமாய் இதுவரையில் ஓதிய வேதம், நாங்கள் இன்றுவரை முறைப்படி வளர்த்துவந்த ஹோமம், நாங்கள் செய்ததவம் இவைகள் எல்லாவைகளுடைய பயனும் இன்று தான் எங்களுக்குக் கிட்டிற்று.

17. உங்கள் மனமோ ஒருவருடைய வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத மனம். அவ்விதமாகிய உங்கள் மனத்தாலேயே எல்லா உலகங்களுக்கும் ஈசனாகிய நீங்கள் எங்களை நினைக்கும்படியான பாக்கியம் பெற்றோமென்றால் எங்கள் பெருமைக்குச் சொல்லவும் வேண்டுமோ.

18. எவனொருவன் உங்களை உள்ளத்தால் ஆராய்ந்தறிகின்றானோ, அதாவது எவன் உள்ளத்தில் நீங்கள் விளங்குகின்றீர்களோ அவன் பெரியோர்களில் பெரியோன். அப்படியிருக்க வேதத்துக்கே பிரமாணமாக விளங்கும் உங்கள் மனத்தில் இருக்கும் எங்கள் பெருமைக்குக் கங்குகரை ஏது.

19. சூரியபகவான் சந்திரபகவான் இவர்களுடைய பதவியைக்காட்டிலும் மேலான பதவியில் நாங்கள் ஏற்கனவே யிருக்கின்றோம் என்பது நிச்சயம். இன்று தாங்கள் எங்களை நினைத்தமாத்திரத்தால் அப்பதவியைக்காட்டிலும் இன்னும் மேலானபதவியை அடைந்தோம் என்பது திண்ணம்.

20. தங்களால் அருளளிக்கப்பட்ட எங்களை நாங்கள் இப்பொழுது வெகு அதிகமாகத்தான் எண்ணிக் கொள்ளுகின்றோம். பெரியவர்கள் நம்மிடம் அன்பு பாராட்டினால் நமக்கிருக்கும் நற்குணத்தில் எப்பொழுதும் அதிக நம்பிக்கை உண்டாவது வழக்கமன்றோ!

21. முக்கண்படைத்த கடவுளே நீங்கள் எங்களை நினைத்த காரணத்தால் எங்கள் உள்ளத்திலிருக்கும் ஸந்தோஷத்தை நாங்கள் வாய்விட்டுச் சொல்லவும் வேண்டுமோ? நீங்கள் எல்லாருடைய உள்ளங்களிலேயும் புகுந்து பார்க்கப்பட்டவர்கள் அன்றோ!

22. நாங்கள் இப்பொழுது தங்களை நேராகக் கண்டுவிட்டோம்; ஆனால் தங்களுடைய தத்துவத்தை அறிய எங்களுக்குச் சக்தி யேது? ஆகையால் கருணைகூர்ந்து தங்களுடைய நிஜ உருவை வெளிக்காட்டுங்கள். தாங்கள் புத்திக்கு எட்டாதவர்களாயிற்றே. தங்களுடைய உருவத்தை நாங்கள் அறிய தாங்களே சொல்ல வேண்டுமன்றோ.

23. தாங்களிப்பொழுது இருக்கும் கோலம் எல்லோருக்கும் எதிரில் விளங்கும் பிரபஞ்சத்தைப் படைக்கும் கோலமா; அல்லது அதை ரட்சிக்கும் கோலமா; அல்லது அதை ஸங்காரம்பண்ணும் கோலமா. இம்மூவிதக் கோலங்களில் இது எக்கோலம்.

24. ஒருக்கால் எங்கள் வேண்டுகோள் பெரும்

வேண்டுகோளா யிருக்கின்றபடியால் அதற்கு மறுமொழி அப்புறம் வரட்டும். எங்களைத் தாங்கள் நினைக்கலானீர்கள். உடனே நாங்கள் இவ்விடம் சித்தமாய் வந்துவிட்டோம். இனி நாங்கள் நடந்துகொள்ளவேண்டியதென்ன. அதைக் கட்டளையிடுங்கள்.

பரமசிவத்தின் மறுமொழி

25. அவ்வாறு முனிவர்கள் வேண்ட, ஈசனார் தமது தலைமேல் பிரகாசிக்கும் சந்திரகலையில் சொற்பகாந்தியைத் தமது அட்டகாஸத்தில் சோபிக்கும் பற்கள் காந்தியால் பெருகச் செய்துகொண்டு மறுமொழி சொல்லலானார்.

26. முனிவர்களே, நான் செய்யப்புகும் காரியம் ஒன்றுவது எனது சொந்த பிரயோஜனத்தை உத்தேசித்துப் புகும் காரியமில்லை என்பது உங்களுக்குத் தெரியுமே. நான் எனது எண் மூர்த்திகளால் இவ்வுருவம்கொண்டு எப்பொழுதும் உலக நன்மைக்காகவே முயலுகின்றேன்.

27. அதிக தாகத்தால் வருந்தும் சாதகப் பறவைகள் மேகத்தினின்று மழையை வேண்டிக் கொள்ளுவதுபோல தங்கள் சத்துருக்களால் ஹிம்ஸையடைந்திருக்கும் தேவர்கள் எப்பொழுதும் பிறருக்குதவி செய்வதையே நோன்பாக கொண்டிருக்கும் என்னிடம் வந்து நான் ஒரு குமாரனை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று யாசித்தார்கள்.

28. தேவகாரியத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு ஒரு குமாரனை அடைய ஹோமத் தீயை உண்டுபண்ண யஜமானன் அரணியை விரும்புவது போல நான் இப்பொழுது பார்வதியை விவாகம் செய்துகொள்ள விரும்புகின்றேன்.

29. எனக்காக நீங்கள் ஹிமவானிடம் சென்று அக்கன்னிகையைக் கேட்கவேண்டும். பெரியவர்கள் முடித்துவைக்கும் சம்பந்தங்கள் ஒரு பொழுதும் கெட்டுப் போகாதல்லவா?

30. வெகு புகழ் பெற்றவராயும் உயர்ந்த வம்சத்தில் தோன்றியவராயும் பூமியின் பாரத்தையே வகிக்கின்றவராயு மிருக்கின்ற ஹிமவானுடன் நானிப்பொழுது சம்பந்தம் பண்ணப்போவது யோசித்துச் செய்யும் சம்பந்தமாகவே நீங்கள் கருதவேண்டும்.

31. ஹிமவானிடம் அவருடைய கன்னிகையை இவ்வாறு கேட்கவேண்டும் என்பது நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் நீங்கள் இவ்விஷயமாய் இயற்றியிருக்கும் ஸ்மிருதியல்லவா எல்லாப் பெரியோர்களும் ஆசாரமாகக் கொண்டாடுகின்றார்கள்.

32. வெகு உத்தமியான அருந்ததியும், இந்த விவாக விஷயத்தில் செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும். விவாகம் முதலிய இவ்வண்ணமான காரியங்களில் பெண்டுகள் ஸாமர்த்தியமல்லவா அதிகமாக எப்பொழுதும் வித்தியைக்கொடுக்கின்றது.

33. ஆகையால் நீங்கள் ஹிமவானுடைய நகரமாகிய ஓஷதிப்ரஸ்தத்துக்கு இக்காரியத்தை நிறைவேற்றிவைக்க ஏகுங்கள். மஹாகோசி என்ற நதி விழும் இடத்தில் அவ்விமயமலையில் நாம் மறுபடி ஸந்திப்போம்.

34. யோகிகளுக்குள் முதல்வரான அவ்வீசனாரே தமது கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஆரம்பிக்கவே பிரம்ம தேவருடைய புதல்வர்களான அத்தவஸிகள் தாங்கள் ஏற்கனவே கலியாணம்செய்து கொண்டு கிரகஸ்தாச்ரமத்திலிருக்கும் வெட்கத்தைத் துறந்தார்கள்.

35. "அப்படியே" என்று அம்முனிவர்கள்ஒப்புக்கொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்கள். ஈசனும் தாம் ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தைப் போய்ச்சேர்ந்தார்.

36. மனத்துக்கொப்பான வேகத்துடன் சென்ற அம்மாமுனிவர்கள் கத்திபோல் நீல நிறம்பெற்று விளங்கிய ஆகாயமார்க்கமாகப் பிரயாணப்பட்டு ஓஷதிபிரஸ்த நகரம் சேர்ந்தார்கள்.

ஓஷதிபிரஸ்த வருணனை.

37. எல்லாவித ஐசுவரியங்களும் நிரம்பி விளங்கும் குபேரன் பட்டணமாகிய அளகையை அடுத்து ஸ்வர்க்கத்திலிருந்து நக்கப்பட்ட ஒரு நகரம் கட்டிவைக்கப்பட்டதுபோல் அவ்வோஷதிபிரஸ்தம் விளங்கலாயிற்று.

38. நாற்புறமும் கங்கையின் பிரவாகத்தால் சூழப்பட்டதாய், மதில் சுவர்களில் விளங்கும் சோதிக் கொடிகள் அமைந்ததாய், பெரும் மாணிக்கக் கற்களால் கட்டப்பட்ட கோபுரவாசல்கள் பொருந்திய கோட்டையாயிருந்தபோதிலும் வெகு ரமணியமாய் அந்நகரம் சோபித்தது.

39. அந்நகரத்து யானைகள் சிங்கத்தின் பயத்தை வென்றவைகள், 'அதாவது * சிங்கத்தைக்காட்டிலும் அதிக பல முள்ளவைகள் என்றபடி' அந்நகரத்துக் குதிரைகளோ இந்திரபகவானுடைய குதிரையாகின்ற உச்சை சிரவஸ் என்ற குதிரையின் வம்சத்திலுண்டானவைகள். அந்நகரத்துப் புருஷஜனங்கள் யக்ஷர்களும் கின்னரர்களும் பெண்டுகள் வனதேவதைகளுமாக விருந்தார்கள்.

40. அந்நகரத்து மாளிகைகளின் உச்சியில் எப்பொழுதும் மேகங்கள் தொங்கா நிற்கும். அவைகள் ஒலிக்கும் போது உண்டாகும் எதிரொலி அம்மாளிகைகளில் வாசிக்கப்படும் முரஜவாத்திய நாதத்துக்கு லயம் கொடுப்பதுபோல் காணப்படும்.

41. அந்நகரத்தில் ஓங்கிநிற்கும் கற்பகத்தருக்களின் கிளைகளில் அசைந்தாடும் துணிகளை அந்நகரத்தார்கள் சிரமப்பட்டுக் கட்டாத கொடிமரங்களாய் விளங்கலாயின.

42. அந்நகரத்தில் இராக்காலத்தில் படிகக் கற்களால் கட்டப்பட்ட மாளிகைகளின் உச்சியில் ஜனங்கள் உல்லாஸமாக உட்கார்ந்து பானம்செய்யும் பொழுது ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்கள் அப்பளிங்கு கற்களுள் தென்படுகிற தோற்றத்தால் அப்பளிங்குபூமியில் இறைக்கப்பட்ட வெண்மலர்களாய் விளங்குகின்றன.

43. அந்நகரத்து மடந்தைகள் இருள் மண்டிய இரவுகளிலும் தங்கள் காதலனை நாடிச்செல்லும் பொழுது ஆங்காங்கு விளங்கும் சோதிக்கொடியின் ஒளியால் தாங்கள் போகும் வழி காட்டப்பட்டவர்களாய் சென்றுகொண்டு இருளின் கொடுமை இன்னதென்றே அறியாதவர்களா யிருக்கின்றார்கள்.

44. அவ்வூரில் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த வயது என்பது யௌவனம் தான். அவ்வூராரை நாசம் பண்ணுகிறவன் மன்மதனே யல்லாது யமனல்ல. மெய்ம்மறந்த தூக்கம் என்பது மன்மதஸாகத்தின் சிரமத்தால் உண்டாகும் தூக்கம்ஒன்றே தான்.

45. அவ்வூரில் இளைஞர்கள் வணங்கி வேண்டிக் கொள்ளுவதெல்லாம் புருவம் நெறிக்க உதடுதுடிக்கத் தமது அழகிய கைவிரல்களால் சுகமாய் அடிக்கும் கட்டழிகளின் கோபம் நீங்கி அவர்கள் தங்களை ஆதரித்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது ஒன்றேதான் *

46. அவ்வூரில் சந்தான விருக்ஷத்தின் நிழலில் வித்தியாதரர்கள் என்ற வழிப்போக்கர்கள் தூங்கிக் கொண்டிருப்பார்கள். பரிமளம் வீசும் கந்தமாதன பருவதம் அவ்வூருக்கு அடுத்த சிங்காரத்தோட்டம்.

47. அவ்வண்ணம் விளங்கிய அவ்வோஷதி பிரஸ்தத்தை அத்தேவமுனிவர்கள் கண்டவுடன் சுவர்க்கலோகத்தில் சுகம் என்று தாங்கள் அதுவரையில் கருதியிருந்ததை பிசகான அபிப்பிராயம் என்று நினைக்கலானார்கள்.

48. அம்முனிவர்கள் வெகு வேகமாய் இறங்கும் பொழுது அவர்களுடைய ஜடைகள் சித்திரத்தில் எழுதப்பட்ட அலன்போல அசைவற்று சோபிக்க, அந்நகரத்து வாயிற்காப்போர்கள் தங்கள் முகங்களை மேல்தூக்கி திகைத்துப் பார்த்துக்கொண்டிருக்க வெகு வேகமாக ஹிமவானுடைய மாளிகையை அடைந்தார்கள்.

49. பெரியோர்களின் பின் சிறியோர்களாய் ஆகாயத்தினின்று கீழ் இறங்கிய அம்முனி சமூகம் ஜலத்துக்குள் பிரதிபிம்பித்துக்காணப்படும் சூரிய பங்தி போலும் விளங்கினது.

50. அவ்வாறு தம்மை நாடி வந்து கொண்டிருந்தவர்களும் தம்மால் ஆராதிக்க வேண்டிய சிறப்புப் பெற்றவர்களுமான அம்முனிவர்களை ஹிமவான் தமது கரங்களில் அர்க்யம் எடுத்துக்கொண்டு வெகு பலமாய் வைக்கப்படுவதால் பூமியையே வளையச்செய்யும் காலடிவைத்து நடந்து வெகு தூரத்திலவர்கள் வரும் பொழுதே ஹிமவான் எதிர்கொண்டு சென்றார்.

51. தமது கற்செங்கற் பொடியடைந்த தாழ்வரைகளை செவ்வுதடாக தமது தேவதாரு விருக்ஷங்களை பெருங்கைகளாக இயற்கையாக தனக்கேற்பட்டிருக்கும் இலையே மார்பாக அவர் சொல்லிக்கொள்ளாமலே ஹிமவானென்று எல்லோரும் அறிந்து கொள்ளும்படி விளங்கலானார்.

52. அவ்விமவான் சாஸ்திரப்பிரகாரம் அந்த ஸப்தரிஷிகளுக்கு மரியாதை பண்ணி தாமே அவர்களுக்கு வழியைக் காட்டிக்கொண்டு வெகு பரிசுத்தமானவர்களாய் விளங்காநின்ற அம்முனிவர்களைத் தமது அரண்மனைக்குள் உபசரித்து உள்கட்டுக்குள் அழைத்துப் போனார்.

* மெத்தனம் பாணம் இவ்விரண்டும் ஔஷதிப் பிரஸ்தத்தின் இல்லை என்றபடி.

* சத்துருக்களின் கோபத்துக்குப் பயப்படுகின்றவர்கள் அங்கில்லை என்றபடி.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

ஆருமில்லா ஊரில் அசுவமேதயாகம் செய்கிறது.—அசுவமேத யாகம்செய்யவேண்டுமாகில்யாக தீக்ஷிதனாக இருக்கும் அரசன் சாஸ்திரத்திற் கூறியபடி ஹோமாதிகள் செய்தபின்னர் தகுந்த அலங்காரங்கள் செய்து ஓர் குதிரையைப் பூப்பிரதக்ஷிணம் செய்யும்படி விடவேண்டும். அதன் பின்னரே அநேகம் வீரர்களைச் செல்லவிடவேண்டும். இந்தக் குதிரை தன் முகபடத்தோடு எங்கே வேண்டுமானாலும் திரிந்துகொண்டுவரும். அந்த முகபடத்தில் இன்ன ராஜாவின் அசுவமேதக்குதிரை என்று எழுதியிருக்கும். இதைக் கண்டதும் வழியிலிருக்கும் ராஜ்யாதிபதிகள் இந்தக் குதிரையைப் பிடித்துக் கட்டிவிடுவார்கள். அவர்களைக் குதிரை பின்வரும் வீரர்கள் யுத்தத்தில் தோற்க அடித்துத் தமது ராஜனது மேன்மையை அங்கீகரிக்கும்படி செய்யவேண்டும். இவ்வாறு பிடித்துக் கட்டாத அரசன்தான் இவ்வீரரது அரசன் ஸ்நேஹிதன் அல்லது அவனைவிடத் தாழ்ந்தவன் என்று அங்கீகரிக்கவேண்டும். இவ்வாறு ஸகல அரசர்களையும் ஜயித்த பின்பு குதிரை திரும்பிப் புறப்பட்ட இடம் வர, அதை விடுத்த அரசன் எல்லா அரசர்களையும் வைத்துக் கொண்டு தன் யாகத்தை நடத்தவேண்டும். ஆகவே அசுவமேதயாகம் செய்வதற்குப் பலவான்களான ஸகல ராஜாக்களையும் ஜயித்தல் வேண்டும். இது எளிதான காரியமல்ல.

இதனால் அசுவமேதயாகம் செய்வது என்றால் அஸாத்யமான பெரிய காரியத்தை அநேக விரோதிகளால் தடுக்கப்பெற்றும், அவர்களை எல்லாம் அடக்கிவிட்டு மிகுந்த ஸாமர்த்தியத்துடன் செய்தல் என்ற பொருளில் இப்பழமொழியில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். இந்தப் பழமொழிக்கு 'தடுக்கக்கூடிய எதிரிகள் இல்லாதஸமயம் பார்த்து பெரிய காரியத்தைச் செய்து முடிப்பதாக வீணபெருமை பேசுவது' என்பது பொருள்.

இப்பழமொழியின் பொருள் புராண கதைகளில் அநேகர் நடத்தையில் நன்றாக வெளிவருவதைக் காணலாம். உத்தரன் கௌரவ ஸேனையை எளிதில் வென்றுவிடுவதாகவும், கர்ணன் அர்ச்சுனனைக் கொன்றுவிடுவதாகவும், இராவணன் பக்கத்து வீரர்கள் எளிதில் ராமஸேனையை ஜயிப்பதாகவும், ஹிரண்யகசிபு ஹரியையும், பௌண்டரீக வாஸுதேவன் கிருஷ்ண பரமாத்மாவையும் கொல்லுவதாகத் தனிமையாக விருக்குங்கால் வீண் பெருமை பேசியதும் இந்தப் பழமொழிக்குத் தகுந்த உதாரணங்கள். 'உத்தரன் ஆரும் இல்லா ஸமயத்தில் அசுவமேதயாகம் பண்ணினது' மிக வேடிக்கையாக விருக்குமாதலின் இங்கு அதை மாத்திரம் எடுத்துக் கூறுவோம்.

பஞ்சபாண்டவர்கள் விராட நகரத்தில் 13-வருஷம் மறைந்து வாஸம் செய்து தமது ஏற்பாட்டின்படி ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாது, ஒருவருஷ காலத்தைக் கழித்து முடிக்குமுன் அவர்களைக் கண்டுபிடித்து மறுபடி 12-வருஷம் வனவாஸம், 1-வருஷம் அஞ்ஞாதவாஸம் செய்யும்படி அனுப்பவேண்டும்; என்ற எண்ணத்துடன் துரியோதனாதியர் விராட நகரத்தின் மேல்படை எடுத்துவந்தனர். அவர்கள் தமது ஸேனைகளை இருபாகமாகப்பிரித்து ஒருபாதியால் ஒரு நாள் விராடநகரத்து வடபுறத்திலிருந்த பசுக்கூட்டங்களைபிடித்தனர், இங்கு விராடராஜன், அர்ச்சுனன் தவிரப் பாண்டவர் நால்வரோடும் ஸகல ஸேனைகளோடும்வந்து எதிர்சேனைகளைத்தோற்கும்படி செய்த இவர்கள் மறுநாள் பட்டணம் திரும்பி வருவதற்குமுன் துரியோதன ஸேனையின் மற்றைப்பாகம் விராடநகரத்துத் தென்புறமிருந்த மாடுகளைப்பிடிக்க, இந்த ஸங்கதியைக் கோபாலர்கள் நகரம்வந்து அங்கிருந்த விராடராஜன் குமாரனான உத்தரனுக்குத் தெரிவித்தனர். உத்தரன் அப்பொழுது பெண்டுகள் மத்தியில் இருந்தான். இவர்கள் வந்து கூறியதும், 'இந்த கொடியிலேயே கௌரவ ஸேனையை நான் சின்னாபின்னமாக்கி விடுவேன். எனக்குத் தகுந்த ஸாரதிமாத்திரம் வேண்டும். அது இல்லாமற் போயிற்றே!' என்று மிகுந்த பரபரப்புடன் பெருமை பாராட்டித் தனக்குத்தகுந்த ஸாரதி ஒருவனைக்கூட வைக்காதுபோன தன் தகப்பனைக் கடிந்துகொண்டான். அப்பொழுது அங்கிருந்த பெண்டுகள் உத்தரன் பராக்கிரமத்தைப் புகழ்ந்து பேச, அவன் தனக்கு உண்டான கர்வ வெறியில் வாயில்வந்தபடி எல்லாம் தன்னைத்தானே புகழ்ந்து பேசிப் பிதற்றத்தொடங்கி விட்டான். அந்த ஸமயத்தில் பிருகந்நளையாகிய அர்ச்சுனன் ஸாரதியாகவந்து அமர, உத்தரன் இருந்த

உத்ஸாஹத்தோடு தன் ரதத்தில் ஏறிக்கொண்டு தென்புறம்நோக்கி யுத்தத்திற்குப் புறப்பட்டான். யுத்தகளம் சென்றதும் கௌரவ ஸேனையைக்கண்டு மிகப்பயந்து 'நான் படத்தில்தான் ஸேனைகளைப் பார்த்திருக்கிறேன். உண்மையான ஸேனை இப்படி இருக்கும் என்று எனக்குத்தெரியாதே! தெரிந்திருந்தால் நான் இங்குவந்தே இருக்கவே மாட்டேன்! உயிருடன் பிழைத்தால் இன்னும் எவ்வளவோ ஸுகங்களை அநுபவிக்கலாமே! தெரியாமல் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டேனே! என்னசெய்வேன்! என்று உளறிக்கொட்டிவிட்டு உத்தரன் தேரிலிருந்து குதித்து ஊர்நோக்கி ஓடிப்போனான். பின்னர் பிரகந்நளை அவனைத்தேற்றித் தான் அர்ச்சுனன் என்பதைத் தெரிவித்து தைரியப்படுத்தி அவனையே ஸாரதியாகக்கொண்டு யுத்தத்தில் ஜயமடைந்து விராட நகரம் வந்து சேர்ந்தான். இக்கதையில் உத்தரன் ஆருமில்லா ஊரில் அசுவமேதயாகம் செய்தவன்.

* * *

யாகங்கள் செய்யும் வழி.—வேதங்களில் இருக்கும் யாகங்களை எல்லாம் செய்யாது விட்டுவிடலாம். யாதொரு குற்றமும் இல்லை. ஆனால் கர்மகாண்டத்திலேயே பிராணி ஹிம்ஸையோடு ஸம்பந்தப்பட்ட ஸோம யாகத்தை மாத்திரம் ஒருவன் விட்டுவிட முடியாது. இதை த்விஜனாகப் பிறந்த ஒவ்வொருவனும் அவசியம்செய்தே தீரவேண்டும் என்றுவேதம் விதிக்கின்றது. இது செய்யாவிடில் பிராம்மணத்வம் நிற்காது என்பதே வேதத்தின் துணிபு. ஆகவே இந்த ஸோம யாகத்தைவிட்டுவிட ஒருவனுக்கு மனம் வராது. யாகம் வேதசம்மதமான கர்மம், அதில் பிராணியைக்கொன்றால் பாபம் இல்லை, கொல்லப்படும் பிராணிமோக்ஷத்தையே அடைகிறது, அதில் உண்டாகும் சிறுபாபங்களுக்குப் பரிஹாரம் யாகத்திலே நடைபெறுகின்றன, என்ற இவைபோன்ற அநேக ஸமாதானங்களை முன்னிட்டுக்கொண்டபோதிலும், மாம்ஸபக்ஷண லேசமே தமது ஸ்வப்னத்திலும் இல்லாத இக்காலத்துப் பிராம்மணர்களுக்கு இந்த ஸோமயாகத்தை நேரிடச் செய்ய எவ்வாறு மனந்துணியும்? ஆகவே ஸோமயாக விஷயத்தின் உட்கருத்து முதலியவைகளை நோக்கில் இதை அவசியம் செய்யவேண்டும் என்றும், இதில் ஏற்படக்கூடிய பிராணி ஹிம்ஸையை நோக்கி இதை விட்டோடவேண்டும் என்றும் நமதுமனம் கவலைப்பாய்ந்தோடும். இந்த விஷயத்தில் தான் இக்காலத்தில் ஜீவகாருண்யம் நிறைந்த சில ஆசாரியர்கள் ஒருவாறு வித்தாந்தம் செய்திருக்கின்றனர். மாவால் ஆடுகள் செய்து இந்த யாகத்தை நடத்தலாம் என்பது அவர்கள் துணிபு. நமது தக்ஷிணதேசத்தில் ஸோமக்கொடி அகப்படாததால் அதற்குப்பதிலாக ஒரு செடியை உபயோகப்படுத்துகிறார்களோ அதுபோல பிராணிஹிம்சை மிகக்கஷ்டமான தொழிலாதலால் பிராணிக்குப் பதிலாக மாவாற் செய்த பசுவை ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? இவ்வாறு மாற்றிச் செய்வதால் பிராணிஹிம்ஸை என்ற கொடிய செயல் இன்றி, அதனால் வெளியாகும் உட்கருத்துக்கு யாதொரு குறைவில்லாமல் யாகத்தை வேதவிதிப்படி செய்துவிடலாம். ஆதலால் அவசியம் செய்யவேண்டும் என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கும் இந்த யாகத்தை மாவால் செய்த பசுவை வைத்துக்கொண்டு-மற்றைய யாகங்களை இக்காலத்தில் விட்டுவிடுவதால் யாதொரு கெடுதலும் இல்லை.

இங்கு ஸோமயாக விஷயமாகக் கர்மகாண்ட நோக்கத்திற்குவிரோதமின்றிச்செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தைச் சில கடுமையான வைதீகர்கள் பின்வருமாறு ஆக்ஷேபிக்கலாம். அது 'எப்பொழுது நாம் ஒரு வஸ்துவை வேறொன்றாகப் பாவித்து விடுகிறோமோ அப்பொழுது நம்வரையில் அதுஅவ்வாறே ஆகிவிடுகின்றது. மாவாற் செய்த பசுவை உயிருள்ள பசுவென்ற பாவனை செய்து அதை வெட்டி யாகம் நடத்தினால் நமக்குப் பிராணிஹிம்ஸை செய்த பாபம் வாராதா? வாராதென்றால் யாகத்தில் பிராணி உண்டாகும் கஷ்டங்களால் நமக்கு வரக்கூடிய பாபங்களை நிவர்த்திக்க ஏற்பட்ட கர்மங்கள் வீணாகும். ஆதலால் மாவால் செய்த பசுவால் என்ன லாபம்' என்பதே. இந்த ஆக்ஷேபனையை எளிதில் நாம் நீக்கிவிடலாம். பிராணியைக்கொன்ற பாபம் நமக்குப் பாவனையால் மாத்திரம் வரும், ஆனால் குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தும் வேண்டுமோ? நேரிட பிராணியைக் கொல்வதால் உண்டாகும் பாபத்திற்கும், பிராணியைக் கொன்றுவிட்டோம் என்ற பாவனையால் உண்டாகும் பாபத்திற்கும் அஜகஜாந்திர வித்யாஸம் என்பது சொல்லாமலே விளங்காதா? மேலும் மாவால் செய்த பசுமூலமாகச் செய்யப்படும் யாகம் எல்லா விஷயத்திலும் வேதத்தில் கூறியபடி செய்யப்படும் யாகமே, யஜமானனுக்குப்பிராணிஹிம்ஸையால் வரக்கூடிய பாபமும் கொஞ்சம் வந்துவிடுகின்றது. ஆனால் பிராணிஹிம்ஸை மாத்திரம் உண்மையில் இல்லை. இந்த லாபம் போதாதா? ஆதலால் முற்கூறிய ஆக்ஷேபனை வீரியமற்றுப் போகிறது.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## சகுந்தலை அல்லது பிரிவினிலை

### 2. உள்ளம் கலந்தகாதை

அடைய முடியாதென்றிருந்த பொருள் அடையக்கூடியதுதான் என்று அரசனுக்குப்பட்டதென்று நாம் முன்பே கூறினோம். ஆயின் தாம் எண்ணுவதற்குக்காலமும் இடமும் கிடைத்தாலன்றி ஸுகமெவ்வாறு உண்டாகும்? தான் வெறுப்புற்று கிடைக்கமுடியாதென்று இருந்தனன், அதுக்கிடைக்கக்கூடியதென்றும் தெரிந்து விட்டது.—இனிக் கட்டவிழ்ந்த கழுதைபோல் மனம் அலையாது என்ன செய்யும்? சகுந்தலையின் உருவமே துஷ்யந்தனது மனவெளியின் முன் நின்றது. அதைப்பற்றி எண்ண அவன் மனம் ஓர்வித குதூஹலமும் துயரமும் அடைந்தது.—அவளை அடைந்தால் ஸுகமுண்டாகும் என்ற எண்ணத்தால் குதூஹலம், அவளை எவ்வாறு அடைவது என்னும் சிந்தனையால் துயரம். வேட்டையாட வந்த விடத்தில் தான் செய்யவேண்டிய கடமைகள் ஒருபால் வருத்த, சகுந்தலையை அடையவேண்டுமென்னும் எண்ணம் மற்றொருபால் தூண்ட, தான் இவ்வாறு சகுந்தலையின் மேல் காமங்கொண்டதற்குக் காச்யபர் என்ன செய்வரோ என்னும் ஐயம் மனத்தை வெருட்ட, ஒன்றும் தோன்றாது மன்னன் ஸ்தம்பித்துச் சற்றயர்ந்து இருந்தான். இதற்குள் அவ்விடம் சில வனத்தில் வசிக்கும் தவத்தினர் அரசன்பால் வந்து தாம் செய்யும் வேள்வியைக் காக்கவேண்டுமென்றுக் கேட்டுக்கொண்டனர். வேட்டையாடுவதை நிறுத்த நிமித்தம் வேண்டுமென்றுக் காத்திருந்த மன்னனுக்குக் 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல' அம்முனிவர்களது வாக்கு பட்டது. 'காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்றவாறு இதுதான் ஸமயமென்று அரசன் தனது சேனாபதிக்குத் தனக்கு வேலை இருப்பதால் வேட்டையாட வரமுடியாதென்று சொல்லும்படிச் செய்தான். ஸரி என முனிவர்களது வாக்கிற்கு 'அவ்வாறே ஆகட்டும்' என்று விடை கூறினான்.

முனிவர்களும் தம் உறைவிடம் அடைந்தார். இதற்குள் சூரியன் மேற்பால் சென்றான். சிவந்த கோலங்கொண்டு செவ்வானம் கண்டது. சின்னாழி ஆனதும் தனக்கும் தெரியாது சகுந்தலையின் வடிவம் அவன் மனவெளிக்கு முன்பட்டது. குளிர்ந்த சந்திரனும் தனது பூரண கிரணங்களுடனும் மன்னன் மனத்தில் உத்ஸாக மூட்டமுடியாமல், மதிமயங்கினான். ஆகிலும் சற்றே அயர்ந்து பொழுதுபோக்கியும் மனவமைதி அடையவில்லை. காட்டினழகும் அவன் மனத்தில் பதியவில்லை. நிலவின் விரிவும் அவன் மனத்தை இழுக்கவில்லை. இதற்கிடையிடையுண்டாகும் ஒலி எல்லாம் சகுந்தலையின் மெல்லடி என்று எண்ணி மயங்குவான். மனது பொங்கி வெப்பமடைந்து சோர்வு கொண்டது. ஆயினும் அச்சோர்விலும் அவன் மனத்தின் முன் ஒரே வடிவந்தான் தெரியும். அது சகுந்தலையின் வடிவமொன்றுதான். மரத்தினிழலும் சகுந்தலையின் நிழலோ என ஐயமுறுவன். இருட்டில் சற்றே மறைந்தசையும் பொருளெல்லாம் ஓர் வேளை சகுந்தலையின் வடிவுதானோ என்று ஐயமுறுவதன்றிச், சோர்வுற்ற மனதிலும் ஓர்வகை உவகையால் ஓர் வலிவுண்டாகிச் சற்றெழுந்து தன்கண்முன் நின்றதாக எண்ணிய சகுந்தலையை நோக்கச்செல்வன். அங்கு சகுந்தலையுமுண்டோ? ஆ! கொடியமனமே உனது செயலல்லவா இவற்றிற்குக் காரணம்?

துயரமுற்றோர் மனதை ஸரிப்படுத்த ஸூரியனுமுதித்தான். கனவிலும் சகுந்தலையின் பித்தேறிய மன்னன் எழுந்து தான் கண்டது கனவுதானோ என மனத்தில் உண்மை அறியுமாறெழுந்தான். இம்மீனகேதனன் செய்யும் பெருந்தீங்கிற்கு என்ன செய்வது? என்னை வாட்டிய விதமே என்மனத்தைக் கொள்ளைகொண்டவள் மனத்தை வாட்டலாகாதோ? ஹும்! இனியாகமும் கடந்தது. அது இருந்தது அடக்கமுடியாத என்மனத்திற்கோர் கடிவாளமாக நின்றது. அதுவும் போய்விட்டது. யான் இனி எங்குச் செல்வது? கதிரவனும் வெப்பமதிகமாகும்படி மேற்கிளம்பா நிற்கின்றது. என் மனத்தின் வெப்பமும் எழுச்சியிலேயே வளர்கின்றது. இக்காலம் சகுந்தலை மாதவிப்பொதும்பரில் ஸுகமே இருப்பள். இருபக்கமும் மாலினி ஆற்றின் காற்று. அழகிய மலர்களின் பூத்துகள் நீரில் கலந்து வாசனை வீசும். குயிலெங்கும் பஞ்சம ஸ்வரத்தில் இனிமையான ஒலியைக் காட்டாநிற்கும் அவ்விடமே யானும் சேர்வேன். அவளைக்காணேனாயினும் அவ்விருந்த இடத்தைக் கண்டேனும்

ஆனந்தமடைவேன். இனி நடப்பேன். இதுவே அவள் மனத்திலென்று மழியாது பதிந்த தவநிலையின் இடம். இம்மரத்திற்குத்தான் அவளும் அவள் தோழியும் இருவரும் நீர் பாய்ச்சுவது. இக்கொடியின் அழகே அவளழகை ஒருவாறு ஒத்திருப்பது. இம்மான் தான் அவளோடு விளையாடுவது. இனி நான் அவளிருக்கும், மாதவிப்பொதும்பரை, அடைவேன்." என்று மனத்தில் பல பல எண்ணி, துஷ்யந்தன் தன் மனத்தின் எழுச்சிக்கொப்ப கால்நடையும் ஒற்றுக்கொள்ளும்படி நடந்தான். ஏதோ சற்றுப் பிரமைக்கொண்டு கிடுகிடுவென ஓடி அம் "மாதவிப்பொதும்ப" ரின்பக்கில் வந்தான்.

இடையே சகுந்தலை தன்மேற்கொண்ட காதலையும் தனக்கவள் கடிதமெழுத இசைந்ததையும் மன்னன் பின்புறமிருந்துக்கண்டான். சகுந்தலையின் நிலைமையையும் அவள் தோழிகட்கு "அம்மன்னனைக்கண்டதும் என்கதி இவ்வாறாயிற்று" என்று எல்லாரும் அவள் நிலையில் அநுதாபமடையுமாறு கூறியதையும் கேட்டனன். "இனி யான் சற்று மறைந்து அவள் என்ன எழுதுகின்றாளோ பார்ப்பேன். நான் முன் செல்லும்பொழுது என்னைக் கடைக்கண்ணால் பார்த்ததால் அவள் என்பால் ஆசை கொண்டாளென்று நினைத்தேன். மற்றும் நடவடிக்கையாலும் மனங் கலங்கினளென்று மறிந்தேன். அவ்வறிவே எனக்கும் தெரியாது தூண்டி இவள்பால் ஆசைக்கொள்ளச் செய்தது. இவற்றை முழுதும் அவ்வாசையின் மிகுதி அறியமுடியாது மறைத்தது. இனி அவ்வாசை விசாலித்து இவளும் நம்பால் காமம் கொள்ளுமாறு செய்து, வேகம் குறைந்தொடுங்கியுள்ளது. மனவமைதி சற்று அடைந்துள்ளேன். அவள் இனிச்செய்வதைச் சற்று அவளறியாதவண்ணம் கவனிப்பேன்." என்று எண்ணியதன்றி அவள்பாலே கண்ணோக்க முழுதும் நிலைத்தது.

சகுந்தலையும் சொல்லமுடியாத வெட்கமடைந்தவளாய் தோழியர்கள் விருப்பத்திற்காகக் கடிதம் வரைந்ததுபோல் காட்டிக்கொண்டு தான் "உன் மனம் அறியேன். ஆயினும் கொடுமனமுடையாய்! உன்பால் பாய்ந்த என் ஆசைப் பெருவெள்ளம் என்னைத்துன்பத்துள் வீழ்த்திவிட்டது" என்றுஎழுதிய கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போழ்தே துஷ்யந்தன் அவள் முன் தோன்றி "உன்னைத் துன்பத்துள் ஆக்கிவிட்டது என் உடலம் முழுதும் எரியச்செய்துவிட்டதென்று" மன்னன் படபடத்துக் கூறினான். உட்கார்ந்திருந்த சகுந்தலை மன்னனுக்கு உபசாரம் செய்யவேண்டி எழுந்திருக்கப் பார்த்தாள். வெட்கம் அவளைத் தடுத்ததன்றி எல்லார் மனத்தையும் பிரமையுள் புகுத்திவிட்டது. ஒருவரையும் சகுந்தலைப்பின் சொல்லவில்லை. அங்கிருந்த தோழியரும் மறைந்தனர். சகுந்தலை "அவர்களும் போய்விட்டனர் யான் போகவேண்டும்" என்றாள். "ஒருவராவது என்பால் இருக்கக்கூடாதா" என்று மற்றும் கூறினாள். அரசன் "கவலைவேண்டாம் யான் உன்பால் உள்ளேன். உனக்கு ஏது வேண்டுமாயினும் யான் செய்வேன்" என்றான்.

"புருகுலத்து மன்னனே! ஆத்திரம் வேண்டாம். யான் ஆசைநோயுள் கிடைப்பினும் யான் என் ஆள் அல்ல. என் இஷ்டப்படி நடக்கக்கூடியவள் அல்ல. கண்வரது உரையின்றி யான் ஒன்றும் செய்யமுடியா"தென்றாள் சகுந்தலை. "மதனனால் கொலையுண்ட என்னை மற்றோர் கொலை உன் மொழியால் செய்யாதிரு" என்றான் மன்னன். "சற்றுப்பொறும். வெளிச்சென்ற என் தந்தை வந்திடில் அவரது அநுமதியின்பேரில் உம்மை முறையே மணப்பேன்" என்றாள் சகுந்தலை, மன்னனும் "நூல்களில்மணம் எண்வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பிரஹ்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்தியம், அசுரம், கந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் எனமனு எழுதியுள்ளார். அவற்றுள் முதல் நான்கு பிராஹ்மணர்க்கும், முதலாறுஅரசர்க்கு முரியதாகும். அவற்றுள் காந்தர்வமே சிறந்தது. அவ்வாறு நாம் மணப்பின் உமது தந்தை தடை கூறார். இது பெரியோர்கண்டவழி" என்றான். "அன்றியும் உனக்கும் என்பால் ஆசையுள்ளது; எனக்குமவ்வாறே பொருந்தியுள்ளது. இனியுன்பயமேன். காந்தர்வ வழியால் என்னை மணக்கலாம்" என்றான் மன்னன். "ஆயினும் ஒன்று வேண்டும்; நீவிர் கூறுவதே முறையாயின், இத்தனியான இடத்தில் நம்மிருவர்க்குள்ளாக ஓர் வரம் கேட்பேன். அதற்கு ஒப்புவீராயின் ஸரி. என்னிடம் பிறக்கும் மகனுக்கு நாட்டைமுற்றுமளிப்பதாக ஈதோர்வரமே வேண்டும்" என்றாள். "மன்னனும் அவ்வாறே ஆகுக!" என்றான்.

காந்தருவவிதத்திலே இருவரும் மணந்தார். சின்னாள் கடந்ததும் "யான் உன்னை எவ்வாறு என்பதியுள் கொள்ளவேண்டுமோ அச்சீருடன் அடையச் செய்வேன்" என்று சொல்லி நாட்டை யடையப் புறப்பட்டனன், "நீவிர் சொல்லிய மொழிகள் உமது மனத்தை அகலாது இருக்கவேண்டும்" என்று சகுந்தலையும் வற்புறுத்தினாள்.

மன்னனும் தான் செய்த வினையைக் குறித்து காச்யபர் எண்ணவெண்ணங் கொள்வாரோ என்னும் ஸந்தேஹம் மனதைக்கவிந்து சிந்தையுள் ஆலாக்கத் தன்னூர் நேர் நோக்கலானான்,

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

பிரிந்த இருவர், இருந்த இடத்திலிருந்து கண்டுக்கொண்டே பேசல்.—இதுவரையும் தூரத்திலிருப்பவர் இருவர் காணாத மின்சார தந்தியின் மூலமாகப் பேசுவதைக் கண்டிருக்கிறோம். இப்பொழுது சில மாதங்களிற்கு முன் ஹாலண்ட்காட்டில் ஓர் ப்ரகிருதி சாஸ்திர வல்லவர் ஓர் புதிய யந்திரம் கண்டுபிடித்திருக்கின்றனர். ஒருவரை ஒருவர் நேராகக் காணாவிட்டாலும் இதன் மூலமாக இருவர் நேராகக் கண்டாற்போல ஒருவரோடு செய்கை முதலிய எல்லா இயல்போடும் பேசலாம்.

* * *

ஒளியில்லா இடத்தில் ஒளி.—நாம் கண்மூடிக் கொண்டிருந்தால் நமக்கொன்றும் தெரியாது இருட்டாய் இருக்கும். ஆனால் மூடிய கண்ணைச் சற்றே கைவிரலால் தேய்த்தோமானால் கண்ணிற்கு பக்கத்தில் ஓர் பிரகாசமாகிய ஒளி சுழல்வதுபோல் காணப்படும். இருந்தாற்போல் இருந்து கண்மேல் ஏதேனும் தாக்கினால் கண்முன் தளதளவென்று ஒளிப்பொறிகள் பறப்பதுபோல் காணப்படும். இது மூளையின் பார்வை நரம்புகளின் சலிப்பினால் உண்டாகும் மயக்கம்.

* * *

மூன்று சிசுக்களைப் பிரசவித்தல்.—மாத்துறைப் பகுதியிலுள்ள ஓர் ஸ்த்ரீ சிலநாட்களுக்கு முன்னே ஒரேகர்ப்பத்திலிருந்து இருபெண்ணும் ஒரு ஆணுமாய் மூன்று சிசுக்களைப் பிரசவித்தனள். பிள்ளைகள் மூன்றுஞ் சௌக்கிய நிலையிலிருக்கின்றனவாம். அவள் பிள்ளைகளுடன் மாத்துறை வைத்தியசாலையிலிருக்கிறாள்.

* * *

இத்தாலியா தேசத்திலும் புத்தமதம்:—பல வருஷங்களுக்கு முன்னே இலங்கைக்குவந்த ஓர் ஜெர்மனியன் இங்கிருந்த காலத்திலே புத்தசமயப் பிரவேசஞ்செய்து அதற்குச் சிலகாலத்துக்குப் பின் சந்நியாசியாயினான். மைனாற்றிலியோக்கா (Myna-tilioka) என்பது அவன் நாமம். அவன் இலங்கையிலேயே 9-வருடத்திற்கு மேலிருந்து அப்பால் ஐரோப்பாவுக்குப்போனான். இப்போ இத்தாலியாவிலுள்ள என்னும் டாக்சி மலையிலேயே சில ஐரோப்பியரைத் தன்னோடு சேர்த்து, அவர்களையுந் தன் மதமாக்கி வைத்துக்கொண்டிருக்கிறான். அந்த மலையிலே இப்போது புத்த சந்நியாசிகள்பலரிருக்கிறார்கள். அவர்களெல்லாரையும் ஒன்றுசேர்த்துப் பிரசாரணங்கள் செய்து, புத்தசமயத்தை எங்குஞ்சென்று பரப்பும்படி அவர்களை ஏவிவருகின்றான்.

* * *

கல்மழை:—வயனாட்டைச் சேர்ந்த எருமைக்கொல்லை தோட்டத்திலும் சுற்றுப்புறங்களிலும் சென்ற மார்ச்சுமீ 22உ பிற்பகல் 3½-மணிக்கு கடலை பருமனுள்ள "கல்மழை"யுடன் மழை தொடங்கிற்று. சிறிது நேரத்திற்குள் மழைநின்று சகலமும் உறைத்த மழையாய் கால்மணி நேரம் கடலைமுதல் எலுமிச்சைப்பழம் அளவுவரை பருமனுள்ளதாய்ச் சொரிந்தது. தண்ணீருக்குப்பதிலாக உறைந்த மழை ஓடிற்று. சகல இடங்களிலும் பூமி காணப்படாமல் உறைந்த மழையால் மூடப்பட்டிருந்தது. பின் 4-மணிவரை மழையும் உறைந்த மழையுமாய்ப் பெய்தது. ஷை உறைந்த மழை மறுநாள் காலை 9-மணிவரையில் கரைந்துபோகாமலிருந்தது. சுற்றுப்புறங்களில் இவ்வளவு ஜாஸ்தியில்லை என்று கேள்வி.

* * *

அறுகால் பசு.—பொதுவாக அறுகால் என்னும் பதத்திற்குத் தமிழில் வண்டு என்று பொருள்படும். வண்டிற்கு ஆறுகால்என்பது அன்றிப்பசுவிற்கு ஆறுகால் காண்பது அதிசயமன்றோ. இந்த வருடம் திருமயிலை உற்சவகாலத்து ஓர்பசுகாட்டப்பட்டது. இதற்கு ஆறுகால், இருவால், ஒருடல், இருமடிக்கூடி ஓர் முகத்துடன் விளங்கியது. இது இயற்கைப் பிறப்பின் அதிசயமே.

* * *

மையின்றி அச்சுப்பதித்தல்.—மையில்லாமல் எழுத்துக்களை அச்சுப்பதித்தற்கிசைவான ஓர் அச்சியந்திரம் தற்போது ஒருவராலியற்றப் பட்டிருக்கின்றது. அச்சுப்பதிக்கும் வேலை முழுவதும் மின்சார உதவிகொண்டே நடத்தப்படும். இப்படி யச்சிட்ட எழுத்துக்களை ஒருவகைத் திராவக மூலமாய்க்கழுவி யழித்து, முந்தியகடுதாசிகளிற் பின்னும் அச்சுப்பதிக்கலா மெனவும் அவர் கூறுகிறாராம்.